# திருமணத்திற்கு முன்னர்
## கலந்தாய்வு செய்வது
# தொடர்பான அறிக்கை

*சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃஃபத்துல் மஸீஹ்*
*அய்யதஹு~ல்லாஹு~த்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்*
*அவர்களின் வழிகாட்டல்கள்*

**வெளியிடுவோர்:**

மன்ஸூபா பந்தி கமிட்டி இந்தியா

காதியான்,பஞ்சாப்

# Notes For Premarital Counselling

*(Directions given by Hazrat Khalifatul Masih V$^{th}$)*

**TAMIL**

# திருமணத்திற்கு முன்னர் கலந்தாய்வு செய்வது தொடர்பான அறிக்கை

*சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் வழிகாட்டல்கள்*

**வெளியிடுவோர்:**

மன்ஸூபா பந்தி கமிட்டி இந்தியா

காதியான்,பஞ்சாப்

# திருமணத்திற்கு முன்னர் கலந்தாய்வு செய்வது தொடர்பான அறிக்கை

Tamil verson of
Notes for Premarital Counselling
(Directions given by Hazrat Khalifatul Masih V)


Book Name : Notes for Premarital Counselling
(Directions given by Hazrat KhalifatulMasih V)
Year : 2015 (First Edition)
Copies : 1000
Translated by : O.M. Muzzammil Ahmad

Published by : Mansuba Bandi Committee (India)
Qadian-143 516
Gurdaspur Distt, Punjab

Prepared by : Nazarat Nashr-o-Isha'at, Qadian
Gurdaspur Distt, Punjab-143 516

For Further information please visit
www.alislam.org
www.mta.in

Noor-ul-Islam Toll Free No : 1800 30 102 13
Tamilnadu Toll Free No : 1800 425 40000

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம்...................................................... | 8 |
| 2 | திருமணத்திற்குமுன் ...................................... | 8 |
| 3 | திருமணத்தில் திருப்தி கொள்ளுதல் ................ | 10 |
| 4 | மஹர் ........................................................... | 10 |
| 5 | கணவரின் வீடு .............................................. | 11 |
| 6 | சீதனம் ...................................................... | 13 |
| 7 | ஒருவர் மற்றவரின் மீதுள்ள பொறுப்புகளைப் பற்றிய எதிர்பார்ப்புகள்.................................. | 14 |
| 8 | சொந்த விவகாரங்கள் தொடர்பான தெளிவுகள்.. | 15 |
| 9 | திருமண விழா .............................................. | 16 |
| 10 | திருமணத்தின்போது கொடுக்கப்படும் நகைகள்.. | 17 |
| 11 | திருமணத்தின்போது கொடுக்கப்படும் அன்பளிப்புகள் ............................................. | 17 |
| 12 | தேன்நிலவு .................................................... | 18 |
| 13 | மாப்பிள்ளை பெற்றோருடன் வாழ்வது ............ | 19 |
| 14 | கஷ்டங்களை நீக்குவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டியவை ................................. | 26 |
| 15 | தவிர்க்க வேண்டிய, எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நபர்கள் ............................ | 29 |
| 16 | உங்கள் வாழ்க்கைத் துணையுடன் தனியாக வாழ்க்கை நடத்துதல் ..................................... | 30 |
| 17 | நிதி ............................................................... | 33 |
| 18 | மக்களை விருந்துக்கு அழைத்தல்..................... | 34 |
| 19 | உறவினர்களை சந்தித்தல் .............................. | 34 |
| 20 | விடுமுறைகள் ................................................ | 35 |
| 21 | குழந்தைகள் .................................................. | 35 |
| 22 | பணம் மற்றும் சொத்து .................................... | 36 |

| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 23 | புதிய ஜோடிகளிடம் பொறுப்புகள் பற்றி எடுத்துக் கூறுதல் ........................................ | 38 |
| 24 | திருமண உறவுத் துறைக்கு ஹுஸூர் அவர்களின் வழிகாட்டல்................................ | 39 |
| 25 | மகனுக்கு வரன் பார்ப்பதில் பெற்றோரின் தவறான வழிமுறை........................................ | 42 |
| 26 | தலாக் குலா அதிகமாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.................................................. | 42 |
| 27 | வேதம் கிடைக்கப்பெற்றவர்களின் ஆணை திருமணம் செய்யலாமா?................................. | 42 |
| 28 | எந்த திருமணத்தில் ஜமாஅத் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளக் கூடாது?................................ | 43 |
| 29 | பெற்றோரின் தலையீட்டினால் சில திருமணங்கள் நடைபெறுவதில்லை என்பதற்கு ஹுஸூர் அவர்களின் பதில்.............................. | 45 |
| 30 | திருமண உறவுத் துறைக் கூட்டம் அமீர் சாஹிபுடன் மாதா மாதம் நடைபெறவேண்டும்... | 48 |
| 31 | இணையதளத்தில் பெண்ணின் படத்தை வெளியிட வேண்டாம்...................................... | 49 |
| 32 | திருமண உறவு தொடர்பாக கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும்...................................... | 50 |
| 33 | ஆகானி பெண்களுக்கு ஹுஸூர் அவர்களின் பாராட்டு........................................................ | 52 |
| 34 | பெண்ணின் புகைப்படைத்தைப் பார்த்து விட்டு வேண்டாம் என்பவர்களுக்கு ஹுஸூர் அவர்களின் பதில்............................................ | 53 |

# முன்னுரை

நுபுவ்வத்திற்குப் பிறகு நேர்வழியிலான உண்மை கிலாஃபத் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் நற்பேறுபெற்ற இயல்பு கொண்டவர்களுக்கும் அல்லாஹ்வின் மகத்தான அருளாகும். நபியின் மரணத்திற்குப் பிறகு நிலைபெறும் கிலாஃபத் வாழ்க்கையின் மூலைமுடுக்குகளில் உள்ள இருண்ட வழிகளைக் கடந்து செல்வதற்கு ஓர் ஒளிதரும் கோபுரமாகத் திகழ்கிறது. ஏனெனில் உண்மையான கலீஃபா அவர்கள் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் ஷரீஅத் மற்றும் இறை விருப்பத்திற்கேற்ப வெளிப்படுத்திக்காட்டி அதை வெற்றிகரமாக ஆக்குவதற்காகவும் நல்விளைவை ஏற்படுத்தத் தகுந்ததாக ஆக்குவதற்காகவும் அதிக அளவில் முயற்சி செய்கின்றார்கள். நல்லொழுக்க, ஆன்மீக, சமுதாய, அரசியல் அளவிலான சரியான மற்றும் நேரிய வழிகளை நிலைநாட்டியவாறு மனிதர்களின் விவகாரங்களில் பரிசுத்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் அவ்வப்போது துஆக்களுடன் கவனமூட்டிக் கொண்டும் இருக்கிறார்கள். சுருக்கமாக, எல்லா வகையான உயர்ந்த முன்னேற்றங்களுக்கும் கிலாஃபத் மட்டுமே உத்தரவாதமாகும்.

**திருமண உறவு விவகாரங்கள் பொதுவாக மிகவும் நுணுக்கமானவையாக இருக்கின்றன. இந்த விஷயத்தில் சரியான கொள்கைகளின்படி நடக்கவில்லையென்றால் எண்ணற்ற பிரச்சனைகள் உருவாகின்றன. மேலும் அன்றாடம் சண்டை சச்சரவுகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அதன் காரணமாக வீடுகளின் சாந்தியும் சமாதானமும் இல்லாமற்போய் விடுகின்றன.** மேலும் அமைதியின்மை நாலப்புறமும் வீழ்ச்சியின் பக்கம் இழுத்துச் சென்று கடைசியில் நாசமாக்கி விடுகிறது. அதற்கான உதாரணங்களை நாம் எல்லா சமூகத்திலும்

காணலாம். மேலும் அதற்கு சரியான வழிகாட்டக் கூடியவர் யாருமில்லை. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் அல்லாஹ்வின் அருளால் நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் என்ற மகத்தான அமைப்பு நிலைபெற்றிருக்கிறது. மேலும் கிலாஃபத்தின் வழிகாட்டுதலினால் ஜமாஅத் வாழ்க்கையின் எல்லா அம்சத்திலும் முன்னேற்றத்தின் படித்தரங்களை நாள்தோறும் கடந்து கொண்டிருக்கிறது. **திருமண உறவுகள், இரத்த உறவுகளைப் பேணுதல் ஆகியவற்றிற்காகவும் நமது அன்பிற்குரிய இமாமாகிய ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் எப்போதும் வழிகாட்டுதல்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.** மேலும் மீண்டும் மீண்டும் நல்ல உறவுகளில் பிணைந்திருப்பதற்கு முழுமையான திட்டங்களைத் தீட்டுகிறார்கள். மேலும் சீர்திருத்தத்தின் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துகிறார்கள். **அடுத்து வரும் பக்கங்களில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் திருமண கலந்தாய்வு (கவுன்ஸிலிங்) தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கிய அவர்களின் முக்கியமான வழிகாட்டல்கள், போதனைகள் வாசகர்களுக்கு முன் எடுத்து வைக்கப்படுகின்றன.** அல்லாஹ் இதை எல்லா வகையிலும் மக்களுக்கு பயனுள்ளதாக ஆக்குவானாக. நஸாரத் நஷ்ரோ இஷாஅத் காதியானின் ஏற்பாட்டின் கீழ் இந்த வழிகாட்டல்களை இந்திய செயல்முறைத் திட்டக் குழு (மன்ஸூபா பந்தீ கமிட்டி இந்தியா) சிறு நூல் வடிவில் வெளியிடும் நற்பேற்றைப் பெறுகிறது. ஃபல்ஹம்து லில்லாஹி அலா தாலிக்.

**நாஸிர் நஷ்ரோ இஷாஅத் காதியான்**

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# திருமணத்திற்கு முன் கலந்தாய்வு (Counselling)தொடர்பான அறிக்கை

இந்த வேலையை துஆவுடன் துவங்குங்கள். அறிமுகம் என்ற முறையில் நீங்கள் உங்களை கணவன் மனைவிக்கு முன்னால், அருகில் இருக்கின்ற நபர்களுக்கு முன்னால் உங்களைப் பற்றி அறிமுகம் செய்யுங்கள். நிகாஹ் குத்பாவில் தக்வா (இறையச்சம்) என்ற சொல் 5 முறை வந்துள்ளது; திருமணத்தின் அடிப்படை இறையச்சமாகும் என்பதை எடுத்துக் கூறலாம்.

நேர்காணல்(Interview) ஏறக்குறைய ஒரு மணி நேரம் இருக்கலாம்; அதை விட அதிகமாக வேண்டாம். நடைமுறையை வெறும் வழிகாட்டல் என்று மட்டும் இல்லாமல் பேசி கலந்துரையாடி ஆர்வமூட்டும் வகையில் அமையுங்கள்.

**முக்கிய குறிப்பு:**

**கலந்தாய்வில் (Counsellingல்) மார்க்க கொள்கைகள் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதோ அல்லது கணவன் மனைவிக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும் என்பதோ அல்லது அவர்களின் ஆன்மீக தகுதியை வளர்க்க வேண்டும் என்பதோ அவசியமில்லை. இதன் முக்கிய நோக்கம், திருமணத்தில் உருவாகின்ற பிரச்சனைகளைப் பற்றியும் எதன் காரணமாக கஷ்டங்களை**

**எதிர்க்கொள்ள வேண்டியது வருகிறதோ அந்த பொதுவான பிரச்சனைகள் பற்றியும் கணவன் மனைவிக்கு எடுத்துக் கூற வேண்டும். மேலும் அந்தக் கஷ்டங்களிலிருந்து எப்படி தப்பிக்க முடியும் என்பதை எடுத்துரைக்க வேண்டும். மார்க்க அறிவு அதிகமாவது, தர்பிய்யத் மற்றும் ஆன்மீக தகுதியில் முன்னேற்றம் காண்பது ஆகியவை தாமாகவே கிடைத்து விடும் என நம்பலாம். (அது கணவன் மனைவியைச் சார்ந்ததாகும்).**

**அறிமுகம்:**

திருமணமான ஜோடிகளிடம் பெருகும் பிரச்சனைகளின் காரணமாக கணவன் மனைவிக்கு ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றி புரிய வைக்க வேண்டும். (மற்ற ஜோடிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை சான்றாக எடுத்து வைத்து விளக்க வேண்டும்).

இந்த சந்திப்பு (Meeting) உங்களின் அறிவுக்காகவும் உங்களுக்குப் புரிய வைப்பதற்காகவும் உங்களை ஆயத்தம் செய்வதற்காகவும் ஆகும்.

**திருமணத்திற்கு முன்:**

(ஒரு திருமணம் துவங்குவதற்கு முன்னரே அது முறிந்து விடுவதற்குக் காரணமாகி விடும் அளவுக்கு எத்தனை பிரச்சனைகள் இருக்கின்றன! இது மிகவும் ஆச்சரியமான விஷயமாகும்.)

**திருமணத்திற்கு முன்னரே உருவாகிவிடும் பிரச்சனைகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள். அவை கொதிக்கின்றன; பிறகு திருமணத்திற்குப் பின்னர் திருமணத்தில் இடையூறை ஏற்படுத்தி விடுகின்ற அல்லது அழித்து விடுகின்ற ஒரு கொதிப்பாக வெளியாகின்றன.**

திருமணம் என்பது இரு நபர்களுக்கிடையேயும் இரு குடும்பங்களுக்கிடையேயும் ஏற்படுகிறது. இரு குடும்பங்களுக்கிடையே பிரச்சனைகளைத் தீர்ப்பதை விட இருவருக்கிடையே உள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பது சற்று எளிதாகும். ஏன்? ஏனெனில் குடும்பத்தில் இருவரை விட அதிகமானவர்கள் இருக்கின்றனர். அவர்களின் பழக்க வழக்கங்கள், நடைமுறைகள், செயல்கள் எத்தகையவை என்றால், அவை பல ஆண்டுகளாக அவர்களுடன் தொடர்ந்து வந்து கொண்டிருகின்றன. மேலும் அவை உறுதிமிக்கவையாகவும் ஆகிவிடுகின்றன. முழு குடும்பத்தினரையும் நேரடியாக எதிர்க்கொள்ள வேண்டாம் என கணவன் மனைவிக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. நீங்களே உங்கள் குடும்பத்தையும் பழக்க வழக்கங்களையும் உருவாக்கிக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் இதைச் செய்வதற்கு முன்னர் நீங்கள் இரு குடும்பங்களின் மரபுகளையும், பழக்க வழக்கங்களையும், செயல்முறைகளையும் - அவை இஸ்லாத்திற்கு மாற்றமானவையாக இல்லாதிருந்தால் அவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள்; அல்லது அவர்கள் செல்கின்ற வழிமுறையை சகித்துக் கொள்ளுங்கள். இது சிறந்ததாகும்.

கீழ்வரும் வழிகாட்டல்களையும் கலந்தாய்வில் (Counselling-ல்) இணைக்குமாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃஃபத்துல் மஸீஹ் அய்யதஹுுல்லாஹுுத்த ஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள்.

**ஓர் ஆண் அல்லது பெண் வேறோர் அஹ்மதியுடன் திருமணம் செய்ய விரும்புகிறார்; ஆனால் தற்போதைய திருமணத்தை அவருக்கு பலவந்தமாக செய்ய வேண்டியது வருகிறதென்றால் அப்படிப்பட்ட நிலையில் பெற்றோர் அதிக**

**தடைகளைஏற்படுத்தாதிருப்பது சிறந்ததாகும். துஆ, இஸ்திகாரா செய்து அல்லது செய்ய வைத்த பிறகு அவர்களும் தமது மகன் அல்லது மகளின் விருப்பத்திற்கேற்ற அந்த சம்பந்தத்தில் திருப்தி கொள்ளவும்.** *(30 ஜனவரி 2015)*

**திருமணத்தில் திருப்தி கொள்ளுதல்:**

இருவரும் திருமணத்தில் ஒருவருக்கொருவர் திருப்தி கொண்டிருக்கிறார்களா?

இருவரில் எவராவது அவரது விருப்பத்திற்கு மாற்றமாக திருமணம் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்களா?

ஒருவர் வேறொருவருடன் திருமணம் செய்ய விரும்புகிறாரா? அல்லது வேறு யாரையாவது நேசிக்கிறாரா?

**2. மஹர்:**

கணவர் சார்பாக மனைவிக்கு வழங்கப்படுவது கட்டாயமாக இருக்கும் மஹர் (மணக்கொடை) நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா?

மனைவியின் மஹர் தொகை திருமணத்தின் முதல் நாளிலிருந்தே மனைவிக்கு உரிமையுடையதாகும். தாருல் கஸா சில குறிப்பிட்ட நிலைமைகளில் அப்படிச் செய்யுமாறு தானாகவே தீர்ப்பு வழங்கினாலேயொழிய அவரை இந்த உரிமையிலிருந்து விலக்கி வைக்க முடியாது.

மஹர் தொகையை கொடுக்காமல் இருப்பதற்கு ஒரே வழிமுறைதான் இருக்கிறது. (கணவர் ஆசையூட்டியோ அல்லது தூண்டுதலோ இல்லாமல்) மனைவி தானாகவே இந்த உரிமையை முழுமகிழ்ச்சியுடன் கொடுக்க வேண்டும். அல்லது

மஹர் தொகையை வாங்கிய பிறகு அதை கணவருக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும்.

மஹர் தொகை இருவரில் ஒருவருக்கொருவரின் திருப்தியுடன் நிர்ணயிக்கப்பட்டதா?

இருவரும் மஹருக்காக நிர்ணயிக்கப்பட்ட பணத்தில்/கரன்ஸியில் திருப்தியாக இருக்கிறார்களா? (இதில் எவரிடமிருந்தாவது நிகாஹ் படிவத்தில் கையெழுத்து வாங்கும்போது எவ்வித மாறுதலும் செய்யவில்லையே?) மஹர் (பணத்தில்/கரன்ஸியில்) ஏதாவது மாற்றம் செய்யப்பட்டிருந்தால் இருவரும் அதில் திருப்தி கொண்டிருக்கிறார்களா?

புகழுக்காக அதிகமாக்கப்பட்ட மஹர் தொகை (அது குறித்து பெண் வீட்டினர் சார்பாக அதை நாங்கள் கேட்க மாட்டோம் என உறுதியளிக்கப்பட்டாலும்) அது முற்றிலும் ஒப்புக்கொள்ளப்படத்தக்கதன்று. அதன் அடிப்படையில் ஒருபோதும் நிகாஹ் அறிவிப்பு செய்யக் கூடாது.

**3. கணவரின் வீடு:**

பொதுவாக சமூகத்தில் பெண் (பிறந்த வீட்டிலிருந்து) வழியனுப்பி வைக்கப்படுகிறார். மேலும் தனது கணவரின் வீட்டில் சென்று வாழ்கிறார். (அதற்கு மாற்றமாக அல்ல). சில நேரத்தில் விதிவிலக்கான சூழ்நிலைகள் உருவாகி விடுகின்றன. ஆனால் அதுவும் ஒருவருக்கொருவர் திருப்தியுடன், சம்மதத்துடன் இருக்க வேண்டும்.

பெண் (கணவரின்) பெற்றோருடைய வீட்டில் (அவரது) பெற்றோருடன் வாழ்வார் என்பதும், அதுவே கணவரின் வீடாகக் கருதப்படும் என்பதும் தெளிவாக்கப்பட்டு விட்டதா? இது தொடர்பாக எந்த ஐயப்பாடும் இருக்கக் கூடாது.

பெற்றோருடன் இருக்கும் காலம் ஒரு குறிப்பிட்ட காலமாக இருக்கும் என்பதில் ஒருவருக்கொருவர் திருப்தி கொண்டவர்களாகவும் சம்மதம் தெரிவித்தவர்களாகவும் இருக்கிறார்களா? அவ்வாறு இல்லையென்றால், இந்த ஏற்பாடு நீண்ட காலமாக இருக்குமா அல்லது குறிப்பிட்ட காலம் வரை இருக்குமா என்பது தெளிவாக்கப்பட வேண்டும். இரு பிரிவினருக்கும் இது தொடர்பாக தெளிவு இருக்க வேண்டும் என்பது மட்டுமின்றி அதில் ஒருவருக்கொருவர் திருப்தி கொண்டிருக்கவும் வேண்டும்.

கணவரின் வீடு (அவருடைய) பெற்றோரின் வீட்டிலிருந்து தனித்திருக்கும் என்பதில் ஒருவருக்கொருவர் திருப்தியும் சம்மதமும் கொண்டிருக்கிறீர்களா? அவ்வாறாயின் வீட்டுப் பொருள்கள் (Furniture) பற்றி என்ன எதிர்பார்க்கப்படுகிறது? பொதுவாக சமையலறையின் பாத்திரங்கள், கத்தி மற்றும் பிற பொருள்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்வது பெண் வீட்டாரிடம் எதிர்பார்க்கப்படுகிறது. அதுமட்டுமின்றி, (சுன்னத்திற்கேற்ப) படுக்கையறை, மரச்சாமான்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து கொடுப்பதும் பெண் வீட்டாரின் பொறுப்பாகும். (மேஜை, நாற்காலி, சோஃபா, மின்சாரம் தொடர்பான மிஷின்கள் ஆகிய) மற்ற பொருள்களை ஏற்பாடு செய்வது மாப்பிள்ளை வீட்டாரின் பொறுப்பாகும். இந்த அமைப்பிலிருந்து எவ்விதத்திலிருந்தாவது முகந்திருப்புதல் முற்றிலும் அவருடைய சொந்த விருப்பத்தின் அடிப்படையில் இருக்கும். இந்த விஷயத்தில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினர் மீது எந்த வகையிலும் அழுத்தம் கொடுக்கக் கூடாது. எந்த பிரிவினராவது தன் மீது ஏதாவது அநியாயமான அழுத்தம் கொடுக்கப்படுகிறதாக உணர்கிறார்களா? அவர்கள் (அது தொடர்பான)

விவகாரங்களில் மகிழ்ச்சியுடன் இருக்கின்றார்களா? அல்லது அவர்கள் திருமணத்திற்கு முன்னர் அது தொடர்பாக ஏதாவது விவகாரத்திற்கு தீர்வு காண விரும்புகின்றனரா?

**4. சீதனம்:**

இது பெண் தன்னுடன் தனது புதிய வீட்டிற்கு கொண்டுவரும் பொருளாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தபோது அவர்கள் அவருக்கு சில சமையலறைப் பொருள்களையும் Bed Furnishing ஆகியவற்றையும் அத்துடன் கொடுத்தார்கள். இந்த எல்லைக்குள்தான் சீதனம் இருக்க வேண்டும்.

**i** ஒருவர் ஒன்றை நல்லது என தாமே விரும்பாத நிலையில், கொடுக்க வேண்டும் என அவர் மீது அழுத்தம் கொடுக்கப்படுகிறதா? சீதனத்தில் கொடுக்கப்படுவதெல்லாம் முழுமையான திருப்தியுடன் கொடுக்க வேண்டும்.

**ii** கொடுக்கப்படும் சீதனம் காட்டுவதற்காகக் கொடுக்கப்படுகிறதா? அல்லது ஏதாவது தேவையை நிறைவேற்றுவதற்காகக் கொடுக்கப்படுகிறதா? எந்தவொரு வேலையையும் இறையச்சத்தை கவனத்திற்கொண்டு செய்யும்போதுதான் அல்லாஹ்வின் அருளைப் பெற முடியும்.

**iii** ஜோடியை வீட்டில் வாழ வைக்க வேண்டும் - அதாவது **Set** செய்ய வேண்டும் என்பதற்காக சீதனத் தொகை அசாதாரணமாக அதிக அளவில் கொடுக்கப்பட்டதா? இரு பிரிவினரும் இதில் திருப்தியும் சம்மதமும் கொண்டிருக்கிறார்களா? ஏனெனில் சில நேரத்தில் மருமகன், தனது குடும்பத்திற்காக உணவிற்கான ஏற்பாடு செய்ய முடியாத பிச்சைக்காரனைப் போன்று, தான்

கருதப்பட்டதாகவும், அதனால்தான் அதிகமாக சீதனம் தரப்பட்டது எனவும் உணர்கின்றார். பல நேரங்களில் சில திருமணங்கள் இதன் காரணமாகவே முறிந்து விடுகின்றன.

**iV** பெண் வீட்டார் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அல்லது வெளி நாட்டிலிருந்து வந்ததன் காரணமாக அல்லது வேறு ஏதாவது காரணங்களினால் (சுன்னத்திற்கேற்ப) சீதனம் கொடுக்க தகுதி இல்லையென்றால், அதை மாப்பிள்ளை வீட்டார் புரிந்து கொண்டார்களா? அதை ஏற்றுக் கொண்டார்களா? இது பின்னர் துக்கத்திற்குக் காரணமாக அமையுமென்றால் திருமண நடவடிக்கையை தொடர்ந்து நடத்துவது நல்லதன்று.

**5. ஒருவர் மற்றவர் மீதுள்ள பொறுப்புகளைப் பற்றிய எதிர்பார்ப்புகள்:**

**i** இரு தரப்பினருக்குமிடையில் இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடந்து விட்டதென்றால் அது தொடர்பாக இனி கேட்பதும், அறிந்து கொள்வதும் நல்லதாகும். பெண்ணிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது? அதாவது அவர் வீட்டு வேலைகள், சமையல் செய்தல், வீட்டை சுத்தப்படுத்துதல் ஆகியவற்றை செய்வாரா? மாப்பிள்ளையிடம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது? வேலைக்குச் செல்லுதல், வீட்டு வேலைகளில் உதவி செய்தல் ஆகியவற்றை செய்வாரா? இருவரும் தத்தமது பங்கில் மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருக்கின்றனரா? சண்டைக்குக் காரணமாக அமையும் ஏதாவது விஷயங்கள் இருக்கின்றனவா? உதாரணமாக,வீட்டில் தகுதியுள்ள சகோதரர்கள், சகோதரிகள் இருந்தும் மனைவியே முழு வீட்டிற்கும் சமைக்க வேண்டும்; துணி துவைக்க வேண்டும்; வீட்டை சுத்தப்படுத்த வேண்டும் என எதிர்பார்ப்பது.

மேலும் கணவன் தன் மனைவியை ஆண்டில் இரண்டு முறை சுற்றுலாவுக்காக வெளிநாட்டுக்கு விடுமுறையில் அழைத்துச் செல்வது ஆகியவை.

**ii** பெண் தனது புதிய வீட்டிலுள்ள நோய்வாய்ப்பட்ட ஒருவரை ஒரு செவிலியரைப் (Nurse) போன்று கவனிக்க வேண்டும் என தன்னிடம் எதிர்பார்க்கப்படுகிறது என்பது அவளுக்குத் தெரியுமா? தன் மனைவியின் குடும்பம் ஏதாவது கஷ்டத்தில் மூழ்கினால் அல்லது ஏதாவது அதிரடியான துன்பம் ஏற்பட்டால் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது வரும் என அவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது என்பது கணவருக்குத் தெரியுமா?

**சொந்த விவகாரங்கள் தொடர்பான தெளிவுகள்:**

**1.** இரு பிரிவினருக்கும் கீழ்வரும் சொந்த விவகாரங்கள் தொடர்பான விஷயங்கள் தெரியுமா?

**i உடல் நலம்:** இருவருக்கும் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த அல்லது இப்போது இருக்கின்ற நிரந்தமான உடல் நலம் தொடர்பான பிரச்சனைகள் பற்றி தெரிவிக்கப்பட்டதா? உதாரணமாக வலிப்பு நோய். அது தற்போது மருந்தின் மூலமாக கட்டுப்பாட்டிற்குள் வந்திருந்தாலும் சரியே. அல்லது Diabetes,Thyroid, Depression, மூளை சம்பந்தமான நோய் ஆகியவை. அப்படிப்பட்ட விஷயங்கள் அமானிதத்துடன் எடுத்துக் கூறப்படாவிட்டால் திருமணங்கள் கடுமையான முறையில் முறிந்து விடுகின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**ii** (ஆண்களுக்கு) முந்தைய திருமணங்கள், மனைவிகள், முந்தைய குழந்தைகள், முன்னர் பேசிய திருமண சம்பந்தங்கள் ஆகியவை.

**iii சொந்த பழக்க வழக்கங்கள்:**

1. உதாரணமாக புகையிலை போடுதல், குடித்தல், மது,**Drugs Use** ஆகியவை சென்ற காலத்தில் பழக்கமாக இருந்ததென்றால் - மற்றவர்களுக்கும் அது பற்றி தெரிந்ததென்றால் தனக்கு மனைவியாக வரப்போகின்றவருக்கு அது பற்றி தெளிவாகக் கூறிவிடுங்கள். இந்த விஷயங்கள் பின்னர் தெரிய வந்தால் அமானித குறைபாட்டின் காரணமாகவும், விஷயத்தை தெளிவாக எடுத்துக் கூறாததன் காரணமாகவும் திருமணம் தீய முறையில் முறியலாம்.

2. வேலை மற்றும் வாழ்வாதாரம்: நீங்கள் எங்கே என்ன வேலை செய்கின்றீர்கள் என்பதை உண்மையாகவே கூறிவிடுங்கள்.

3. மனைவிகள் வேலை செய்ய விரும்புகின்றனர் என்றால் அதை (அவர்கள்) கூறி விடட்டும்.

4. பிள்ளைகளுக்கு தமது திருமணம் சீக்கிரம் அல்லது காலதாமதமாக நடப்பது பற்றிய விருப்பம்.

5. மாமியார் வீட்டினர் தொடர்ந்து சந்திக்க வருவதை விரும்புவது அல்லது விரும்பாமலிருப்பது.

6. ஜமாஅத் வேலைகளில் கலந்து கொள்வதில் விருப்பமின்மை; இல்லையென்றால் அதில் நம்பிக்கை.

7. தொழுகை மற்றும் ஜமாஅத் கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்வது.

8. சந்தாவை நிறைவேற்றுவது மற்றும் ஜமாஅத் பணிகளில் கலந்து கொள்வது.

**6. திருமண விழா:**

1.திருமணத்தின்போது சில சம்பிரதாயங்கள் அல்லது பழக்கங்கள் ஒரு குடும்பத்தினருக்கு

பொதுவானதாகக் கருதப்படுகின்றன. ஆனால் மற்ற குடும்பத்தினரிடம் அதே சம்பிரதாயங்கள் தவறானவையாகக் கருதப்படுகின்றன. உதாரணமாக, ஒரு குடும்பத்தின் சார்பாக மற்ற குடும்பத்தின் எல்லா வீட்டினருக்கும் அன்பளிப்பு வழங்குதல்.

2. ருக்ஸதானா, வலீமா ஆகிய திருமண விழாக்களில் யாருக்கெல்லாம் அழைப்பு விடுக்கப்படும்? யாருக்கு அழைப்பு விடுக்கப்பட மாட்டாது.

3. பாராத் (மாப்பிள்ளையின் வீட்டிலிருந்து திருமணத்திற்காக செல்லும் குழு)

## 7. திருமணத்தின்போது கொடுக்கப்படும் நகைகள்:

பொதுவாக திருமணத்தின்போது கொடுக்கப்படும் நகைகள் திருமணத்தின் உடன்படிக்கையாகவே கருதப்படுகிறது - முன்னரே அது தொடர்பாக தெளிவாக விஷயம் தீர்மானிக்கப்பட்டாலேயொழிய. இந்த விஷயத்தை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் - அல்லாஹ் காப்பானாக - பின்னர் திருமண உறவு முறிந்து விட்டால் அந்தப் பொருள்களை திருப்பிக் கொடுக்க வேண்டியது வரும். ஆனால் திருமணம் உறுதியாகி விட்டால் அந்த நகைகள் மனைவிக்கு உரியவையாகி விடுகின்றன. அவர் அதனை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

## திருமணத்தின்போது கொடுக்கப்படும் அன்பளிப்புகள்:

திருமணத்தின்போது கொடுக்கப்படும் அன்பளிப்புகள் அன்பளிப்புகளாகவே இருக்கின்றன. அவை எவர்களுக்கு கொடுக்கப்பட்டனவோ அவர்களுடைய உடைமைப் பொருள்களாகி

விடுகின்றன. ஏற்றுக் கொண்டவர் அதை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். ஆனால் குறிப்பாக மாமனார் வீட்டிலிருந்து தரப்படும் அன்பளிப்புகளை அதன் முக்கியத்துவம் வெளிப்படுவதற்காக குறிப்பாக பாதுகாக்க வேண்டும். அது **உங்களுக்குப் பிடித்தமில்லாத ஓர் அன்பளிப்பு அல்லது துணிமணி மாமியாரிடமிருந்து கிடைத்திருக்கிறது என்றாலும் நீங்கள் அதை ஒருமுறை அணிந்தவாறு இருக்க வேண்டும்.** அவ்வாறே வரதட்சணையில் கொடுக்கப்பட்ட துணிமணிகளையும் மக்களுக்கு முன் அணிய வேண்டும். அன்பளிப்பு கொடுத்தவர்களுக்குத் தெரிவதற்காக அவ்வாறு செய்ய வேண்டும். **உங்களுடைய குடும்பத்தின் விருப்பப்பட்ட, விருப்பமில்லாத அனைத்து விஷயங்கள் குறித்தும் (மாமனார் வீட்டினர்) முன்னரே தெரிந்திருப்பது சாத்தியமில்லை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.** அவர்கள் தம் சார்பாக சிறந்ததிலும் சிறந்த முயற்சி செய்திருக்கிறார்கள். அந்த முயற்சியைப் பற்றிய உணர்வை நாம் வெளிப்படுத்தாதிருப்பது ஆரம்பத்திலிருந்தே ஒரு தீய விளைவை விட்டுச் செல்கின்றது. நீங்கள் மதிப்பளிப்பவர்களாக தென்படும் வகையில் உள்ளத்தை உறுதிப்படுத்தியவாறு, உயிரைப் பிடித்துக் கொண்டவாறு அந்தப் பொருள்களை பயன்படுத்துங்கள்.

### 8. தேன்நிலவு: (Honeymoon)

1. முன்னரே முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது Surprise ஆக இருக்குமா? (வியப்பூட்டும் வகையில் திடீரென்று இருக்குமா?)**எப்படி இருந்தாலும்தேன்நிலவுக்கு செல்லாதிருப்பது Surprise ஆக இருக்கக் கூடாது. (அதாவது தேன்நிலவு இருக்காது என்பது Surprise ஆக இருக்கக் கூடாது.)** சட்டைப் பை

அதற்கு அனுமதி அளிக்கவில்லையென்றால் ஆரம்பத்திலிருந்தே அதை தெளிவுபடுத்தி விட வேண்டும். அதில் வெட்கப்பட வேண்டிய எந்த விஷயமும் இல்லை. இந்த விவகாரங்களில் தெளிவு குறைவாக இருப்பதன் காரணமாக எதிர்காலத்தில் சீர்குலைவு ஏற்படுகிறது.

2. வெளிநாட்டிற்கு செல்ல வேண்டுமென்றால் கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்), தடுப்பு ஊசி ஆகியவை சரியானவையாக இருக்கின்றனவா? எனப் பார்க்க வேண்டும். வெளிநாடு செல்வது பற்றிய செய்தியே பெண்ணிற்கு தெரியாத நிலையில், அவள் முன்னரே அதற்கான ஏற்பாட்டை செய்திருப்பாள் என மாப்பிள்ளை நம்பியிருக்கக் கூடாது.

**9. மாப்பிள்ளை பெற்றோருடன் வாழ்வது:**

**1. முதலில் சில நாட்கள்:**

**i** பெண் விருந்தினராவார். அவரை நன்றாக கவனிக்க வேண்டும்.

**ii** தற்போது அவர் வீட்டின் பணிகளைக் கவனிக்க வேண்டும் என அவரிடம் நம்பிக்கை கொள்ள வேண்டாம்.

**iii** வீட்டிலுள்ள அனைவரும் அவரை அழகிய முறையில் வரவேற்க வேண்டும்.

**iV** பெண் தற்போதுதான் தனது வீட்டின் ஓய்வான நிலையை விட்டு வந்திருக்கிறார். மேலும் துக்கமும், பெற்றோரை விட்டு தூரம் வந்திருக்கும் உணர்வும் இருக்கும். அதைப் புரிந்து அநுதாபம் காட்ட வேண்டும். அந்த சந்தர்ப்பத்தில் அநுதாபம் காட்டாமல் இருப்பது மாமியர் வீடு கடுமையானது; இரக்கமற்றது என்ற பாதிப்பை உருவாக்கி விடும். எனவே இதனை

எந்நிலையிலும் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

**V பெண்ணிற்கு கணவரைத் தவிர வேறு எவரும் வீட்டின் எந்த வேலையையும் செய்யச் சொல்லக் கூடாது.** குறிப்பாக மாமியார், நாத்தனார்கள் இதை கவனத்திற்கொள்ள வேண்டும். இந்த விஷயத்தையும் ஒரு பேச்சுவார்த்தை என்ற முறையில் செய்ய வேண்டும். எந்தவொரு கடினமான வகையிலோ அல்லது அச்சமூட்டக்கூடிய வகையிலோ இருக்கக் கூடாது. பெண்ணை உங்கள் வீட்டின் சுற்றுச் சூழலுக்கேற்ப படிப்படியாகவும், ஞானத்துடனும், நளினமாகவும் கலந்து கொள்ள வையுங்கள். வலுக்கட்டாயமாக வீட்டின் உறுப்பினராக்க முயற்சி செய்யாதீர்கள்.

**Vi** வீட்டின் ஒவ்வொரு நபரும் வீட்டை கவனிப்பதில் பங்கு பெறும் வகையில் வீட்டு வேலைகளை நீதியுடன் பகிர்ந்தளியுங்கள். **பெண் அடிமையாகவோ அல்லது பணிப்பெண்ணாகவோ வீட்டிற்கு வரவில்லை.**

**2. புதிய பழக்க வழக்கங்கள் மற்றும் வழிமுறைகள்:**

பல்வேறு குடும்பங்களில் பல்வேறு விதமான வழிமுறைகள் இருக்கின்றன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதை உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களின் செயல்முறை வேறுவிதமாக இருக்கிறதென்றால் உங்கள் வழிமுறையை வலுக்கட்டாயமாக திணிக்காதீர்கள். அவர்களின் பழக்கங்கள், வழிமுறைகள் ஆகியவற்றை எள்ளிநகையாடாதீர்கள். எப்போதும் கண்ணியத்துடனும், புரிந்தவாறும்,

ஞானத்துடன்செயல்பட்டவாறும் நடந்து கொள்ளுங்கள்.

**3. ஒவ்வொரு வீட்டிலும் தொடர்புகளுக்கான வித்தியாசங்கள் இருக்கின்றன:**

ஒவ்வொரு வீட்டிலும் ஒருவருக்கொருவருடனான தொடர்புகள் வித்தியாசமானவையாக இருக்கின்றன. ஒரு வீட்டில் தாய் எல்லா தீர்ப்புகளையும் வழங்கலாம். சில வீடுகளில் தந்தை அல்லது பெரிய மகன் தீர்ப்புகளை வழங்கலாம். சில வீடுகளில் சில குறிப்பிட்ட வகையான விவகாரத்திற்கு சில குறிப்பிட்ட நபர் தீர்ப்பு வழங்கலாம் என்பதையும் கவனத்திற் கொள்ளுங்கள். கணவன் மனைவி இருவருமே ஆரம்பத்திலிருந்தே இந்த விவகாரத்தை புரிந்து கொள்ளுங்கள்; அறிந்து கொள்ளுங்கள். பிறகு அதற்கு கண்ணியமும் அளியுங்கள். உங்களின் வழிமுறைகளை மற்றவர்கள் மீது திணிக்க முயற்சி செய்யாதீர்கள். இந்த சூழ்நிலை திருமணம் உறுதியானதற்கு அதிக காலத்திற்குப் பிறகு வரும். இந்த அறிவுரை கணவன் மனைவி இருவருக்குமாகும்.

**4. வீட்டிலுள்ளவர்களின் எதிர்பார்ப்புகள்:**

**i** திருமணத்தின் ஆரம்ப நாட்களில் பெண் மணமகளைப் போன்று இருக்க வேண்டும். ஆண் மணமகனைப் போன்று இருக்க வேண்டும். பெண் காலையில் ஆயத்தமாகி நல்ல ஆடையில் கீழே வர வேண்டும். மேலும் ஆண் மருமகன் என்ற கடமைகளை நிறைவேற்றியவாறு தனது மாமனார் வீட்டில் கண்ணியத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

**ii** மற்றவர்களிடமிருந்து தரப்படும் அன்பளிப்புகளை கண்ணியப்படுத்த வேண்டும். அன்பளிப்பை கண்ணியப்படுத்துவது

நல்லொழுக்கத்தில் அடங்கும். மாமனார் வீட்டிலிருந்து கிடைத்த சட்டை அல்லது சங்கிலி ஆகியவற்றை அணிவது நல்லொழுக்கமாகக் கருதப்படுவது மட்டுமின்றி அது மிக்க நல்ல தாக்கத்தையும் விட்டுச் செல்லும்.

**iii** மருமகள் தனது மாமனார் மாமியாரை அதிகமாக மதிக்க வேண்டும். மகனும் தனது தாய் தந்தையரை பெற்றோர் என்ற வகையில் மிகவும் கண்ணியமளித்து வர வேண்டும். மருமகள் வந்ததனால் அதில் எவ்வித குறைவும் ஏற்படக் கூடாது. இருவரும் ஒருவர் மற்றவரது பெற்றோருடன் நல்லிணக்கத்துடனும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**5. வீட்டிலுள்ள சிக்கல்கள்:**

**i** பல சந்தர்ப்பங்களில் இருவரின் பெற்றோர்களுக்கும் தமது பிள்ளைகளை இழந்து விட்ட உணர்வு கண்டிப்பாக இருக்கும். ஏனெனில் அவர்களின் பிள்ளைகள் இப்போது அவர்களின் பிள்ளைகள் மட்டுமல்ல; மாறாக, மற்றவர்களுடனும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். இது எதிர்பார்க்கப்பட வேண்டிய விஷயமாகும். இதைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட விஷயம் தெரிந்தால் மனிதன் கோபப்படவோ அல்லது மனவருத்தப்படவோ கூடாது. மாறாக, அதில் பொறுமை மட்டும் காட்ட வேண்டும். அதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஒரே வழி, மனிதன், தானே குடும்பத்தின் ஒரு பகுதியாக ஆகிவிட வேண்டும். இது கணவன் மனைவி இருவருக்கும் அவசியமானதாகும்.

**ii பொதுவாக நாத்தனார்களுடனுள்ள விவகாரங்கள் கஷ்டமானவையாக இருக்கின்றன.** ஏனெனில் (தன்) சகோதரரை இன்னொருவருடன்

(அதாவது அவர் மனைவியுடன்) பார்ப்பது கடினமானதாக இருக்கிறது. அதற்குரிய மிகச் சிறந்த தீர்வு என்னவெனில், முடிந்தவரை இந்த விஷயத்தை கண்டும் காணாமல் விட்டு விட்டு **(நாத்தனார்களாகிய) அவர்களுடன் நட்பை ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள்.** உங்கள் இருவருக்கும் பொதுவான, பிடித்தமான விவகாரங்களைத் தேடுங்கள். அவற்றின் மூலமாக நட்பு உருவாக வேண்டும்.

**6. ஒருவர் மற்றவரின் எதிர்பார்ப்புகள்:**

**i அமானிதம்:** இப்போது வாழ்க்கையில் ஒரு புதிய துணைவர் வந்து விட்டார். இனி ஒருவருக்கொருவரின் இரகசியத்தையும், மறைவான விஷயத்தையும் இரசியமாகவே வைக்க வேண்டியது கட்டாயமாகும். இதன் கருத்து, இப்போது தாய், தந்தை, சகோதரர், சகோதரி ஆகியோரைவிட அதிகமாக துணைவர் அமானிதத்திற்குரியவராகி விட்டார். இந்த அமானிதம் ஒருபோதும் உடைந்து விடக்கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**ii கண்ணியமளித்தல்:** உங்களின் விருப்பம், விருப்பமின்மை, உங்களின் ஆசை, ஆர்வம் ஆகியவற்றிக்கு கண்ணியமளிப்பது உங்களின் உரிமையாகும். அவ்வாறே அவருடைய துணைவிக்கும் அதே உரிமை இருக்கிறது. தற்போது நீங்கள் ஒருவருக்கொருவர் இணைகின்ற இரு வேறுபட்ட மக்களாவீர்கள். ஒருவருக்கொருவருடனுள்ள ஆசை, ஆர்வத்தை ஒன்றாக்குவதற்கு அதிக நேரம் தேவைப்படும்.

**iii ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளுதல்:** கணவன் மனைவி ஒருவருக்கொருவரின் துன்பங்களையும், கஷ்டங்களையும் புரிய வேண்டும். அதாவது இருவரையும் ஒருவருக்கொருவர் ஜோடி

சேர்க்கப்படும்போது ஏற்படுகின்ற அல்லது ஏற்பட சாத்தியமாயிருக்கின்ற துன்பங்களைப் புரியுங்கள். ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளுதல் என்பதன் கருத்து, ஒருவருக்கொருவருக்கு மாறுவதற்கான சந்தர்ப்பத்தையும் நேரத்தையும் கொடுங்கள். இருவருக்கும் ஒருவருக்கொருவர் இணக்கமாவதற்கு ஏதாவது கஷ்டம் ஏற்படலாம் என்பதை உணருங்கள்.

**iV சகிப்புத்தன்மை:** ஒருவருக்கொருவர் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பது நோக்கமாக இருக்கிறதென்றால் ஒருவர் மற்றவரின் தவறுகளின்போது - கஷ்டங்களின்போது சகித்துக் கொள்ள வேண்டும்; பொறுத்துக் கொள்ள வேண்டும். முடிவுக்குக் கொண்டு வருவது மிகவும் கடினமாக இருக்கும் சில விவகாரங்களும் வந்து விடுகின்றன. உதாரணமாக, ஒரு மனிதன் தூங்கும்போது குறட்டை விடுவதிலிருந்து விலக முடியாதிருக்கலாம். அல்லது அவருக்கு அதிகமாக வியர்வை வரலாம். அல்லது (தூக்கத்தில்) குறிப்பிட்ட முறையில் பல்லைக் கடிக்கலாம்.எனவே சகித்துக் கொள்ளுங்கள்; இதை உணரக் குடியவர்களாக மாறுங்கள். உண்ணுகின்ற, குடிக்கின்ற விஷயம் தொடர்பாகவும் பிரச்சனைகள் வரலாம். உதாரணமாக, உணவை ஒரு குறிப்பிட்ட முறையில் சமைத்தல் ஆகியவை. இங்கு சகித்துக் கொள்வதும், பொறுமை செய்வதும் அவசியமானதாகும். அதை தவறாக உணர்ந்து உங்களுக்கு மாமனார் வீட்டில் உணவு சமைக்கும் முறையை கண்ணியப்படுத்துவதே இல்லையே என(மனைவி கணவரிடம்) கூறக் கூடாது.

**V கணவன் மனைவி உறவுகள்:** இந்த மாதிரியான விவகாரங்கள் தொடர்பாக கணவன் மனைவிக்கு இடையில் மட்டும் பேச்சு வார்த்தை இருப்பது சிறந்தது. குறிப்பாக ஆரம்ப சில வாரங்களில் வேறு எந்த நபருக்கும் இதில் தலையிட வேண்டிய தேவையில்லை.

கணவன் மனைவி ஒருவருக்கொருவர் இந்த விவகாரங்களுக்கு தீர்வு காண வேண்டும். மேலும் அநுபவமின்மையை உணர்வு மற்றும் அநுதாபத்தின் மூலம் தீர்வு காணுங்கள்.

**Vi ஒருவருக்கொருவருடன் நேரத்தைக் கழித்தல்:** திருமணத்தின் ஆரம்ப நாட்களில் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் அதிக அளவில் நேரத்தை ஒன்றாக கழிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எந்த மாற்றமும் ஏற்படவேயில்லை என்று இருப்பது பொருத்தமற்றதாகும். அது எதிர்காலத்தில் நல்ல அடிப்படைக்குக் காரணமாக இருக்காது. ஆனால் அத்துடன் வீட்டின் மற்ற உறுப்பினர்களின் உரிமைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**Vii** ஒருவர் மற்றவருக்கு குறைந்த பட்சம், அவர்கள் பெற்றோர் அல்லது சகோதர சகோதரிகளின் உரிமைகளைக் கவனத்தில் கொள்ளும் அளவுக்கு நேரத்தையும் சந்தர்ப்பத்தையும் கொடுங்கள். உதாரணமாக, காலை நேரத்தில் அவர்களை சந்தித்தல், அல்லது உணவு சமைத்தல் ஆகியவை. வீட்டில் இது பொதுவானதாக இருக்கிறதென்றால் பொருத்தமானதாக நடக்கட்டும். தடை செய்யாதீர்கள்.

**Viii** வீட்டிலுள்ள மற்ற நபர்கள் கண்டும் காணாது விட்டு விடப்பட்டார்கள் என கருதாதிருக்கும் பொருட்டு அவர்களின் நிலைமைகளையும் விசாரிக்க வேண்டும்.

**iX** தனது வீட்டிலுள்ள தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது பெற்றோரின் நிலைமைகளைத் கேட்டல். மேலும் அவர்களுக்கு தனது நிலையைப் பற்றி எடுத்துக் கூறுதல்.

**(X)** நண்பர்களுடன் தொடர்பு கொள்ளுதல். அவர்களுக்கு தனது நிலைமை பற்றி எடுத்துக் கூறுதல். ஆனால் இப்போது பொறுப்புகள் மாறி விட்டன. மேலும் **இப்போது கணவன் அல்லது மனைவி ஆகியவர்கள்தான் எல்லாரையும் விட முக்கியமானவர்களாவர். எனவே நண்பர்களுடன் கழிக்கும் நேரத்தைக் குறைக்க வேண்டியது வரும். அதற்காக முற்றிலும் விட்டு விடுவதும் சரியனறு.**

**7. ஆரம்ப சில நாட்களுக்குப் பிறகு:**

இந்த நாட்கள் கழிந்த பிறகு திருமணத்தின் மிகவும் அதிகமான மகிழ்ச்சிக்குரிய நிலை சற்று தணியும்போது மனிதன் தனது நண்பர்களையும் தனது குடும்பத்தினரையும் ஒரு வேறுபட்ட கோணத்தில் - ஒரு புது ஒளியில் பார்க்க ஆரம்பித்து விடுகிறான். இதற்கு முன்னர் புறக்கணித்து வந்த விஷயங்கள் இப்போது சிறப்பானவையாகவும், முக்கியமானவை யாகவும் தென்படுகின்றன. இப்போது இது ஒரு புதிய வாழ்க்கையாகும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். மேலும் அதில் நீங்கள் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். **சில நேரத்தில் நீங்கள் உரிமையை விட்டுக் கொடுத்தீர்கள் என்றால் சில நேரத்தில் அவர்கள் விட்டுக் கொடுக்க வேண்டும்.** நடுநிலையான வழியை மேற்கொள்ளுங்கள்.

**ஏதாவது கஷ்டங்கள் முன்னால் வந்தால் அவற்றை நீக்குவதற்காக கீழ் வரும் விஷயங்களை கவனத்திற் கொள்ள வேண்டும்:**

1. எப்போதும் இறையச்சத்தை மனதில் வையுங்கள். அது என்னவென்றால் இந்த வேலை அல்லாஹ்வுடைய மகிழ்ச்சிக்குக் காரணமாக அமையுமா? அல்லது அவனது கோபத்திற்குக் காரணமாக அமையுமா? எனப் பார்க்க வேண்டும்.

இதற்கு எந்நேரமும் முன்னுரிமை கொடுங்கள்.

**2. வாழ்க்கைத் துணையுடன் உள்ள பிரச்சனைகள்:** இவற்றிக்கு ஒருவருக்கொருவர் பேசி ஞானத்துடனும் சகிப்புத் தன்மையுடனும் தீர்வு காணலாம்.

**3. குடும்பப் பிரச்சனைகள்:** இவற்றிக்கும் ஒருவருக்கொருவர் பேசி ஞானத்துடனும் சகிப்புத் தன்மையுடனும் தீர்வு காணலாம். **இந்த விவகாரத்தில் குடும்பத்தை கலந்து கொள்ள வைக்காமலிருப்பது சிறந்தது.** ஏனெனில் அவர்கள் தமது சிந்தனை, புரியும் திறனுக்கேற்ப எதை சிறந்தது எனக் கருதுகிறார்களோ அதைக் கூறுவார்கள். ஆனால் உங்களுக்கோ ஒரு புதிய வாழ்க்கை ஆரம்பமாகி இருக்கிறது. உங்களின் ஒட்டுமொத்தமான நடைமுறைகள் முன்னுரிமைகளின் விளைவாக நீங்கள் உங்கள் சிந்தனைகளையும் பழக்க வழக்கங்களையும் ஆயத்தம் செய்து கொண்டிருப்பீர்கள். குடும்ப விவகாரங்களில் (உங்கள் குடும்பத்திலுள்ள பிறர்) தலையிடுவது பெரும்பாலான நேரங்களில் திருமணம் முறிவதற்குக் காரணமாக ஆகி விடுகின்றது.

4. சண்டையின் சந்தப்பங்கள் எப்போதாவது வரத்தான் செய்யும். சில நேரத்தில் அதிகமாகவும் வரலாம். ஆனால் அதை விட அதிகமாக அவசியம் இவையாகும்:

**i** ஒருவர் கோபத்தில் இருக்கும்போது அடுத்தவர் பேசுவதிலிருந்தும், பதில் கூறுவதிலிருந்தும் விலகியிருக்கட்டும்.

**ii** எந்த நிலையிலும் அசுத்தமான வார்த்தைகளைக் கூறாதீர்கள்.

**iii** உங்கள் சண்டையில் மற்ற குடும்பத்தினர்களைப் பற்றிப் பேசாதீர்கள். (அதாவது உங்கள் பெற்றோர் அப்படிப்பட்டவர்கள். அல்லது

உங்கள் உறவினர்கள் இப்படிப்பட்டவர்கள் ஆகியவற்றைக் கூறாதீர்கள்).

iV ஒருபோதும் கடுமை காட்டாதீர்கள். (அதாவது பொருள்களை தூக்கி எறிதல் அல்லது எவ்விதத்திலாவது அடித்தல்). **கடுமையாக நடந்து கொள்வதன் காரணமாகத்தான் ஒருவர் மற்றவரிடத்தில் கண்ணியத்தை இழக்கிறார்.**

V எப்போதும் வாக்குவாதத்தை எவ்வளவு முடியுமோ சீக்கிரம் முடித்து விட வேண்டும். அது இப்படியும் நடக்கலாம். (தனது தவறாக இல்லாவிட்டாலும் மற்றவர் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்றால்) அடியார் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். (பின்னர் கோபம் தணிந்த பிறகு புரிய வைக்கலாம்) அல்லது மற்றவரின் பேச்சுக்கு பதில் கூறக் கூடாது. (ஏனெனில் இரண்டு கைகளையும் தட்டும்போதுதான் ஓசை எழுகிறது.)

**Vi சண்டைக்கு தீர்வு காணாமல் படுக்கைக்குள் ஒருபோதும் செல்லாதீர்கள்.**

**5. தொடர்ந்து சண்டை நடந்தால்:**

இப்படியும் சில நேரத்தில் நடக்கலாம். அதில் வீட்டில் புரியும் திறன் கொண்ட பெரியவர் - அவர் எவருக்கும் சார்ந்து பேசாதவராக இருந்தால் உதவி செய்யலாம். சில நேரத்தில் குடும்பத்தில் உங்கள் நண்பர்களின் ஒத்த வயதைக் கொண்ட சிறு வயதுடையவர்கள் - அவர்கள் அவர்களுக்கு அதிக நெருக்கம் கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்கள் உங்களுக்கு உதவி செய்யலாம். இந்த வழிமுறையும் உதவாவிட்டால் வெளியிலிருந்து மறைமுகமாக உதவி வாங்குவது சிறந்ததாகும். இஸ்லாஹீ கமிட்டியுடன் (சீர்திருத்தக் குழுவுடன்) தொடர்பு கொள்வதும்

அவசியமாகும். அல்லது உங்கள் சுற்றுவட்டாரத்தின் **Counsellor** (கலந்தாய்வு செய்பவர்) அல்லது **Advisor** (அறிவுரை கூறுபவர்) ஆகியோரிடமும் தொடர்பு கொள்ளலாம். துஆவின் ஆற்றலை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். (ரப்பனா ஹன்பலா மின் அஸ்வாஜினா வஸுர்ரிய்யாத்தினா குர்ரத்த அஃயுனின் வஜ்அல்னா லில் முத்தகீன இமாமா - எங்கள் இறைவா!எங்கள் மனைவிகளையும், எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக என்ற துஆ - திருக்குர் ஆன் 25:75). ஹுஸூர் அவர்களுக்கும், அவ்வாறே மற்ற பெரியவர்களுக்கும் துஆவுக்காக விண்ணப்பம் எழுதுவதும் அவசியமானதாகும். அது நற்கூலிக்குக் காரணமாகும்.

**6. குடும்பத்தின் இரகசியம்:** எப்படி இருந்தாலும் கணவன் மனைவி ஒருவருக்கொருவர் ஒரு புதிய வாழ்க்கையைக் கழிப்பது அவர்களின் வேலையாகும். ஒருவர் மற்றவரின் மீதுள்ள நம்பிக்கையை ஒருபோதும் முறித்து விடக் கூடாது. வீட்டில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி வெளியிலுள்ளவர்களுக்கு ஒருபோதும் தெரிவிக்காதீர்கள். குறிப்பாக மற்றவர்களுக்கு முன்னால் உங்கள் புதிய வீட்டின் குறைகளைப் பற்றி ஒருபோதும் எடுத்துரைக்காதீர்கள்.

**கீழ்வரும் நபர்களை விட்டும் தவிர்ந்திருங்கள்; எச்சரிக்கையாக இருங்கள்:**

**i** குடும்பம் எப்படி நடக்கிறது என்பதைத் தெரிய விரும்புகின்ற உறவினர்கள் - ஆனால் உண்மையில் அவர்கள் அந்த விஷயங்களால் வெறும் இன்பம் காண விரும்புகிறார்கள். மிகவும் குறைவாக உதவி செய்கிறார்கள். (இவர்களிடமிருந்து தவிர்ந்திருங்கள்).

**ii** உங்களுக்கு உதவி செய்வதாகக் கூறிக் கொண்டு

- ஆனால் (அவர்கள் மீது நீங்கள் வைத்திருக்கும்) உங்கள் நம்பிக்கையை - குறிப்பாக உங்கள் தேவையைக் கருத்திற்கொண்டவாறுநிலைநாட்ட முடியாத நண்பர்கள். (இவர்களிடமிருந்து தவிர்ந்திருங்கள்).

**iii** பல புதிய குடும்பங்களைப் பற்றி அவர்களிடம் என்ன குறைகள் இருக்கின்றன எனத் தேடுகின்ற- நம்பிக்கையுடன் அவற்றைப் பற்றி அறிய நாடுகின்ற மக்களை தவிருங்கள்.

**உங்கள் வாழ்க்கைத் துணையுடன் தனியாக வாழ்க்கை நடத்துதல்:**

உங்களுடைய முந்தைய வாழ்க்கையை விட முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும் அந்த வாழ்க்கையை ஆயத்தம் செய்யுங்கள்.

**A.** கீழ்வருபவை உங்களுடைய பொதுவான வாழ்க்கையின் தொடர் செயலாக இருக்க வேண்டும்:

**i** ஒன்றாக எழுங்கள். ஒன்றாக காலையுணவு சாப்பிடுங்கள். நீங்கள் படுக்கையிலேயே படுத்துக் கொண்டிருக்கும் நிலையில் கணவரை காலையுணவு தயார் செய்ய வைக்காதீர்கள். அவரை தனியாகவே காலையுணவு சாப்பிட வைக்காதீர்கள்.

**ii** கணவரின் துணியை அவர் வேலைக்கு செல்லும் முன்னர் ஸ்திரீ செய்து வைப்பதில் நீங்கள் இருவரும் ஒன்றுபட்ட கருத்து கொண்டிருக்கின்றீர்கள் என்றால், பிறகு அதை கவனத்தில் கொள்ளுங்கள்.

**iii** உணவை உடன் கொடுத்தனுப்ப வேண்டுமென்றால் ஒரு நாள் முன்பு இரவில் அல்லது பொருத்தமான நேரத்திற்கு முன்பு ஆயத்தமாக்கி வையுங்கள்.

iV இரவு உணவு (அல்லது பகல் உணவு அவர் அதற்காக வீட்டிற்கு வருகிறார் என்றால்) குறித்த நேரத்தில் ஆயத்தமாக இருக்க வேண்டும். மேலும் அவருக்கும் பிடித்தமானதாக இருக்கும் உணவை ஆயத்தம் செய்ய முயற்சி செய்யுங்கள்.

V வீட்டு வேலைகளையும் பகலில் செய்துகொண்டே இருங்கள். துப்புரவுப் பணிகளை செய்து கொண்டிருத்தல், உணவு சமைத்தல், அத்துடன் பாத்திரங்களை கழுவுதல் ஆகியவற்றில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

**Vi கணவர் வீட்டிற்கு திரும்பி வரும்போது நீங்களும் ஆயத்தமாக இருங்கள்.** பொருத்தமான ஆடையை அணிந்திருக்க வேண்டும். கணவர் பணியிலிருந்து களைப்படைந்து வரும்போது **தன் மனைவி காலையில் தூங்கும்போது இருந்த அதே ஆடையில் இருந்து கொண்டு இங்குமங்கும் திரிவதைப் பார்க்கும்போது அது கணவரின் துன்பத்திற்குக் காரணமாக இருக்கிறது - அது சுத்தமாக இருந்தாலும் சரியே.**

**B.** கணவர் வீட்டிலிருந்து வேலைக்காக செல்லும்போது (மனைவிக்கு) திடீரென்று தனிமை உணர்வு எற்படுகின்றது. மன உளைச்சலுக்கும் ஆளாகக் கூடும். **மனைவியாகிய நீங்கள் கீழ்வரும் விஷயங்களில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்:**

**i** தனிமையில் அதிகமாக சிந்திக்கக் கூடாது.

**ii** அதிக நேரம் இன்டர்நெட்டில் (இணைய தளம்) அல்லது தொலைபேசியியில் செலவு செய்வதும் நஷ்டம் தரக் கூடியதாகும்.

**iii** தூங்கிக் கொண்டிருப்பதும், வீட்டைப் பற்றி பொருட்படுத்தாதிருப்பதும் நல்லதன்று.

**3. தனிமையில் நேரத்தை சரியான முறையில் பயன்படுத்துதல்:**

1. வீட்டிலுள்ள பல்வேறுபட்ட வேலைகளைப் பற்றி ஒரு நிகழ்ச்சியை ஆயத்தம் செய்யுங்கள். அதில் ஒவ்வொரு வேலையையும் ஒரு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் முடிக்க வேண்டும்.

2. பிற்காலத்தில் பயன்தரத்தக்க பணிகளில் உங்களை ஈடுபடுத்துங்கள். (உதாரணமாக ஏதாவதொன்றில் Course எடுத்தல்.)

3. உங்கள் கணவரும் திருப்தி கொள்ளும் அப்படிப்பட்ட மக்களுடன் நட்பு கொள்ளுங்கள். கணவர் திருப்தி கொள்ளாதவர்களுடன் ஒருபோதும் நட்பு கொள்ளாதீர்கள்.

4. இரு குடும்பங்களிலும் அவ்வப்போது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள். மேலும் அவர்களுக்கு உங்கள் நிலைமைகள் பற்றி தெரியப்படுத்திக் கொண்டிருங்கள். மேலும் துஆ செய்யக் கூறிக் கொண்டிருங்கள்.

5. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களைப் படிப்பதன் மூலம் உங்கள் மார்க்க அறிவை அதிகப்படுத்துவதில் ஈடுபட்டிருங்கள். இது வருங்காலத்தில் உங்கள் சந்ததிகளுக்கு ஒரு நல்ல முன்மாதிரியை எடுத்து வைக்க உங்களுக்கு உதவும்.

6. இரு பெற்றோர்களுடனும் அவ்வப்போது பேசிக்கொண்டிருங்கள். மேலும் ஒருவருக்கொருவர் அறிவுரை கூறிக்கொண்டிருங்கள். இதனால் அனைவருக்கும் ஆறுதல் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

10. நிதி:

**சில நேரத்தில் திருமண உறவுகளில் பிரச்சனை ஏற்படுவதற்கு பொருளாதார விவகாரங்களும் காரணமாக இருக்கின்றன. எனவே கொடுக்கல் வாங்கல் விஷயத்தை நீதியுடனும் உணர்வுடனும் கையாளுங்கள்.**

1. **வீட்டின் செலவினங்கள்:** செலவினங்கள் இருவரின் திருப்திக்கும் விருப்பத்துக்கும் ஏற்றவாறு இருக்கின்றனவா? சில நேரத்தில் இப்படியும் இருக்கிறது. அதாவது, ஆண் தனது ஏதாவதோர் உறவினருக்கு பொருளாதார உதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்து வைத்திருக்கிறார். இந்த விஷயத்தை தெளிவாக, விபரமாக புரிய வேண்டிய தேவை இருக்கிறது. **கணவரின் வருவாயிலிருந்து தனது உறவினருக்கு உதவி செய்யுமாறு வற்புறுத்துவதற்கு மனைவிக்கு அதிகாரமில்லை.** ஆனால் ஆணின் வருவாயிலிருந்து கணவன் மனைவி செலவினங்கள் நீங்கலாக ஒரு பெரும் பகுதி வெளியில் செல்கின்ற நிலை இருக்கிறதென்றால் அது பற்றிய தெளிவு ஆரம்பத்திலேயே இருக்க வேண்டும். மேலும் திருமணத்திற்கு முன்னர் இருவரும் இது விஷயத்தில் திருப்தி கொண்டிருக்க வேண்டும்.

வீட்டை எப்படி நடத்துவது என்பது பற்றி ஒருவருக்கொருவர் பேசி முடிவு செய்யுங்கள். அன்றாட வீட்டு வேலைகளை யார் நடத்துவார்? போன்றவை. பொதுவாக இது வீட்டின் பெண்ணின் பொறுப்பாகும். ஆனால் இது பற்றி எந்த குறிப்பிட்ட சட்டமும் இல்லை. ஒருவருக்கொருவர் எந்த முடிவெடுத்தாலும் இருவரும் அதில் திருப்தி கொள்ள வேண்டும்.

வீட்டின் செலவினங்களை வீட்டின் பெண் பொறுப்பேற்க வேண்டுமென்றால் வீட்டு வேலைகள் நல்ல முறையில் நடப்பதற்கு ஒவ்வொரு வாரமும்

அல்லது ஒவ்வொரு மாதமும் எவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும் என முடிவெடுக்க வேண்டும். அதற்கென எப்போதும் பணம் இருக்க வேண்டும். மேலும் கொடுக்கப்படும் பணம் பொருத்தமானதா இல்லையா என அவ்வப்போது பார்த்தும் வர வேண்டும்.

வீட்டை நடத்துவதில் கணவன் மனைவிக்கு என்னென்ன பொறுப்புகள் இருக்கும் என்ற விஷயங்கள் முடிவெடுக்கப்பட வேண்டும். அதாவது மின்சாரம், தண்ணீருக்கான பில் யார் கொடுப்பார்? இன்டர்நெட் பில் யார் கொடுப்பார்? காருக்கான பெட்ரோல் யார் கொடுப்பார்? இன்சூரன்ஸ் யார் கொடுப்பார் ஆகியவை.

**வீட்டின் செலவினங்கள் நீங்கலாக மனைவிக்கும் அவரது சொந்த செலவுக்காகபொருத்தமான ரூபாய் கொடுக்க வேண்டும்.** அவர் தாமே வேலை செய்கிறார்; எனவே அவருக்கு தேவை இல்லை என்றால் பிறகு வீட்டின் வேலைகள் இருவரின் திருப்தியுடன் நடக்க வேண்டும்.

**மக்களை விருந்துக்கு அழைத்தல்:**

கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரிடம் கூறாமல் எவரையும் வீட்டிற்கு வருமாறு விருந்துக்கு அழைத்து வரக் கூடாது. (விதிவிலக்கான நிலையில் ஆகுமானதாகும்). **கணவன் மனைவி ஆகிய இருவரில் ஒருவருக்கு வேறொரு நபருடன் பிரச்சனை இருக்கும் நிலையில், அப்படிப்பட்டவரில் எவரையும் வீட்டிற்கு விருந்துக்கு அழைக்கக் கூடாது.** அல்லாஹ் எவருக்கு உரிமை வழங்கி இருக்கிறானோ அவர்களைத் தவிர. (அதாவது பெற்றோர் மற்றும் இரத்த உறவுகள்)

**உறவினர்களை சந்தித்தல்:**

இருவரும் பெற்றோருடன் முறைப்படி சந்திப்பது நல்ல விஷயமாகும். இருவருக்கும் உரிமைகள்

இருக்கின்றன. இருவரின் நம்பிக்கைக்கு இந்த உரிமைகள் பறிக்கப்படாமல் இருப்பது அவசியமானதாகும்.

**விடுமுறைகள்:**

திருமணம் விலைமதிக்கத்தக்க ஒன்றாகும். முதல் ஆண்டிலேயே விடுமுறைகளை வேண்டுவது பொருத்தமற்றதாகும். ஆயினும் இதற்கென்று எந்தவொரு சட்டமும் இல்லை. எந்தவொரு விடுமுறையையும் கேட்பதற்கு முன்னர் வீட்டின் செலவினங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் சட்டைப் பை அதற்கு அனுமதியளிக்கிறதா? பொருத்தமானதுதானா? என்றும் பார்க்க வேண்டும். நல்ல விடுமுறைகள் ஜோடிகளை அருகில் கொண்டு வருகின்றன; அவர்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டுகின்றன. ஆனால் பலவந்தமாக எடுக்கப்படும் விடுமுறைகள் கணவன் மனைவி இருவரில் எவருக்கும் எந்த பலனும் தருவதில்லை.

**குழந்தைகள்:** எப்போது குழந்தைகளைப் பெற்றெடுப்பது என்று தீர்மானிப்பதில் ஒருவருக்கொருவர் திருப்தியுடன் இருக்க வேண்டும். **மாமனார் வீட்டினரின் சார்பாக எந்த விதமான அழுத்தமும் இருக்கக் கூடாது.** ஆனால் தனது ஆசையை வெளிப்படுத்துவதில் தவறில்லை. குழந்தை பிறப்பதில் ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு இருந்தால் பிறகு அதை திருமணத்திற்கு முன்பு அல்லது அடுத்த ஆண்டில் பிரச்சனையாக்கக் கூடாது. குழந்தை பிறப்பதில் சிக்கல்கள் இருக்கலாம். இது மருத்துவ பிரச்சனையின் காரணமாக இருக்கலாம். மருத்துவக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது மலட்டுத்தன்மை இருவர் சார்பாகவும் சரிசமமாக இருக்கலாம். எனவே ஒருவரை குற்றவாளியாக்குவது பொருத்தமன்று. ஓர் ஆண்டு முயற்சி செய்தும் குழந்தை பிறக்கவில்லை

என்றால் மருத்துவ உதவிகளைப் பெற வேண்டும். மேலும் இருவரும் மருத்துவரிடம் ஒன்றாகச் செல்ல வேண்டும்.

**பணம் மற்றும் சொத்து:**

**இஸ்லாத்தின்படி, கணவன் சம்பாதிப்பது கணவன் மனைவி இருவருக்குமாகும் என்பதை மறந்து விடக் கூடாது. ஆனால் மனைவி சம்பாதிப்பது அவளுடைய உரிமையாகும்.** அவள் விரும்பும் வகையில் அவள் அதை செலவு செய்யலாம். கணவன்மார்களுக்கு தமது மனைவியர்களின் வருவாயிலிருந்து தமக்கும் கொஞ்சம் கிடைக்க வேண்டும் என்று அதன் மீது பார்வை இருக்கக் கூடாது. அவர்கள் தமது வருவாயை உங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்களை கட்டாயப்படுத்தவோ அல்லது ஏற்றுக் கொள்ள வைக்கவோ கூடாது. மனைவியும்சேர்ந்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எந்த கணவர் வீட்டின் செலவினங்களை குறைவாகக் கொடுக்கிறாரோ அவர் தவறிழைக்கிறார். மனைவியின் சார்பாக எந்தப் பணம் கொடுக்கப்பட்டாலும் அது தமது திருப்தியுடன், அவருடைய விருப்பத்தின்படி கொடுக்க வேண்டும்.

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## கனடாவிலுள்ள ரிஷ்தா வ நாத்தா (திருமண உறவுகளை ஏற்படுத்தும்) கமிட்டிக்கு வழிகாட்டல்:

ரிஷ்தா வ நாத்தா (திருமண உறவுத் துறை) செயலர் படித்த இளைஞர்கள் பெண்ணை தேர்ந்தெடுக்கும் வட்டம் குறிப்பிட்ட அளவில் இருக்கிறது (அதாவது இப்படிப்பட்ட பெண் வேண்டும் என்ற அளவுக்கு இருக்கிறது) எனக் கூறினார். அப்போது **ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** படித்த மக்களைப் பற்றி எனக்கு இன்னொன்றும் தெரிய வந்திருக்கிறது. அதாவது இவர்கள் பெண்ணிடம், நீ பர்தா அணியக் கூடாது. தலையை மறைக்கக் கூடாது என்றும் கட்டளையிடுகின்றனர். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: உண்மை என்னவென்றால், அவர்களிடம் கலந்தாய்வு (Counselling) செய்ய வேண்டும். இஸ்லாமிய போதனை என்ன என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** இப்போது நான் மக்களிடம் - புதிய ஜோடிகளிடம் தமது பொறுப்புகளைப் பற்றிய உணர்வு ஏற்படுவதற்காக நிகாஹ் குத்பாக்களில் சில விஷயங்களைக் கூற ஆரம்பித்திருக்கிறேன். முரப்பிகளுக்கும் நான் கூறுகிறேன். எனது குத்பாக்களிலிருந்து கருத்துக்களை எடுத்து அவற்றை உங்களுடைய கலந்தாய்வின் (Coun-sellingன்) வழிகாட்டலில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இளைஞர்கள், இள வயது பெண்கள் சார்பாக எழும் பல்வேறு கேள்விகளுக்கான சரியான பதில்களைப் பற்றி நீங்கள் தெரிந்திருக்க வேண்டும் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

நான் பல நேரங்களில் பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியிருக்கிறேன். அவை அனைத்தையும் தேர்ந்தெடுங்கள். ஏதோ ஒரு குத்பாவை மட்டும் போதுமானதாகக் கொள்ளாதீர்கள் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** கலந்தாய்வில் (Counsellingல்) அவர்களுக்கு, திருமணத்தின் நோக்கம் என்ன? இது தொடர்பாக இஸ்லாமிய போதனை என்ன? உங்களுடைய சிந்தனை என்ன? ஆகிய விஷயங்களை நினைவூட்டுங்கள். மேலும் நீங்கள் எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்? நீங்கள் எந்த குடும்பத்தைச் சார்ந்தவர்கள்? உங்களுடைய பெரியவர்கள் என்ன தியாகங்களை செய்துள்ளனர்? பிறகு இறைவன் எவ்வாறு தனது அருள்களை வழங்கினான்? இப்போது நீங்கள் உலகத்தின் பக்கம் செல்லாதீர்கள். மார்க்கத்தில் நிலைத்திருப்பதும், உங்கள் குடும்பத்தின் நன்மைகளிலும் இறையச்சத்திலும் நிலைத்திருப்பதும்தான் அல்லாஹ்வின் அருள்களுக்கும், அருட்கொடைகளுக்கும் நன்றி செலுத்துவதாகும் என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** எனவே உண்மையான விஷயம் நன்மை, இறையச்சம் ஆகும். அது இருக்க வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** இங்கு கனடா, அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளில் சில இளைஞர்கள் சில பொருத்தமற்ற வேலைகளில் ஈடுபட்டு விடுகின்றனர். மேலும் அவற்றில் சில குறைபாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. **சிலநேரத்தில் தர்பிய்யத் கொடுப்பதால், புரிய வைப்பதால் சீர்திருத்தம் ஏற்பட்டு விடுகிறது.** சில நேரத்தில் சீர்திருத்தம் ஏற்படுவதில்லை. அவ்வாறே சில நேரத்தில்

சில வயதுப் பெண்களிடமும் குறைகள் இருக்கின்றன. எப்படி இருந்தாலும் சம்பந்தம் நடக்கும்போது இந்த அனைத்து விஷயங்களும் முன்னால் வர வேண்டும். பின்னர் சண்டை ஏற்படாதிருப்பதற்காக இருவரும் இறையச்சத்துடன் (தம்மிடம் உள்ள குறைகளை) கூறிவிட வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ரிஷ்தா வ நாத்தா (திருமண உறவுத் துறை) கமிட்டி இரகசியத்தைப் பேணக் கூடியதாக இருக்க வேண்டும். (மக்களுக்கு) உங்களைப் பற்றிய நம்பிக்கை நிலைத்திருக்க வேண்டும். உங்களைப் பற்றிய நம்பிக்கையை நிலைநாட்டுங்கள். நீங்கள் மக்களுக்கு அநுதாபம் காட்டுபவர்களாக இருங்கள். **இளைஞர்களுக்கு அநுதாபமுள்ளவர்களாக இருக்க வேண்டும்; வயதுப் பெண்களுக்கு அநுதாபமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.** நீங்கள் உங்கள் கமிட்டியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கலாம். கருத்து கூறும் தகுதி கொண்ட, அறிவுள்ள, நல்லவர்களை நீங்கள் இணைக்கலாம். **முபல்லிகையும் இணைக்கலாம்.** என்ன விஷயம் பேசப்படுமோ அது இரசியமாக வைக்கப்படும் என்று மக்களிடம் உங்களைப் பற்றிய நம்பிக்கையை நிலைநாட்டுவதுதான் அசல் விஷயமாகும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** சில குடும்பத்தினர்கள் எப்படி இருக்கிறார்கள் என்றால், அவர்கள் **பெண்ணைப் பற்றி இவள் வரதட்சணை கொண்டு வரவில்லை; இவளுக்கு குழந்தை பிறப்பதில்லை; இவளுக்கு பெண் குழந்தைகள் மட்டுமே பிறக்கின்றன என ஏளனம் செய்கின்றனர். இவ்வாறு மாப்பிள்ளை வீட்டார் பெண்ணை ஏளனம் செய்வதால் பிறகு பிரிவு ஏற்பட்டு விடுகிறது.** பாகிஸ்தானின் கிராமப்புறங்களிலிருந்து வந்துள்ள சில

தந்தை வழிப்பாட்டிகள், அல்லது தாய் வழிப் பாட்டிகளுக்கு கிராமப்புற தாக்கம் மேலோங்கி இருக்கிறது; அவர்களின் இந்த அறிவீனமான சிந்தனையின் காரணமாக சில திருமண உறவுகள் முறிந்து விடுகின்றன.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** பிறகு இங்கு மிக நீண்ட காலமாக வந்திருக்கின்ற குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களின் சிந்தனை இங்குள்ளவர்களின் சிந்தனையாகி விட்டது. சுதந்திரமான சிந்தனையாகும். இந்த பிரச்சனைகள் எங்களுக்கு ஏற்படுகின்றன என ஆண்களும் எனக்கு எழுதுகின்றனர்; பெண்களும் எழுதுகின்றனர். அவர்களின் அந்த **அனைத்து கடிதங்களையும், விஷயங்களையும் நான் உங்களுக்கு குறிப்பிட்டால் உங்களுக்கு வேறு எந்த வேலை செய்வதற்கும் நேரமே எஞ்சியிருக்காது!**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** தாய் தந்தையரிடம் ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லை என்றால் - புரிந்து கொள்ளும் திறன் இல்லை என்றால் அதுவும் உறவுகளில் பிரச்சனைகளுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. எனவே உங்களுடன் ஓர் உளவியல் நுபுணரையும் (Psychologist) வைத்துக்கொள்ள வேண்டியது வரும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** எந்த விதமான உறவை விரும்புகிறீர்கள்? எப்படிப்பட்ட குடும்பம் எப்படிப்பட்ட மனைவி வேண்டும் என ஆணிடமும் பெண்ணிடமும் கேட்க வேண்டும். மனைவி கணவரின் பெற்றோருடன் வாழ வேண்டுமென்றால் பிறகு என்ன limitation (எல்லை) இருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் பேச வேண்டும். கணவரிடம் தாயின், தந்தையின், மனைவியின் உரிமையைக் கொடுங்கள் எனக் கூற வேண்டும். எல்லா உரிமைகளைப் பற்றியும்

அவருக்குக் கூறுங்கள். உரிமைகள் பற்றிய இஸ்லாமிய போதனைகளை அவருக்கு எடுத்துக் கூறுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய மேற்கோள்களை எடுத்து வைக்கலாம்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** தர்பிய்யத் துறைக்கு மிகப் பெரும் பணி இருக்கிறது. அவ்வாறே குத்தாம், அன்ஸார், லஜ்னா ஆகியவற்றின் தர்பிய்யத் துறைகளுக்கும் பெரும் பணி இருக்கிறது. அனைவரும் இணைந்து தர்பிய்யத் செய்து கொண்டிருங்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: இந்த நிலைமைகளாகும். இந்த விவகாரங்களாகும்; இப்படி இருக்க வேண்டியது வரும் ஆகியவை ஆணுக்கும், பெண்ணுக்கும், இரு குடும்பத்தினருக்கும் தெளிவுபடுத்தி விடுங்கள். பிறகு என்ன விரும்புகிறார்களோ தீர்ப்பளித்துக் கொள்ளட்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ஒரு கருத்தரங்கம் (Seminar) நடத்த வேண்டியது வரும். அதில் இந்த விஷயங்கள் பெயரில்லாமல் விவாதிக்கப்பட வேண்டும். மேலும் இந்த விவகாரங்கள், பிரச்சனைகள் தொடர்பாக இஸ்லாமிய போதனைகள் எடுத்துக் கூறப்பட வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** உட்புறத்திலுள்ள விஷயங்கள் தெரிவதற்காக குத்தாம், லஜ்னா இருவரும் தத்தமது வட்டத்தில் வினாத்தாளைத் தயார் செய்ய வேண்டும். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நான் யூ.கே வில் குத்தாம் மற்றும் லஜ்னாவிடம் தனித்தனியாக கணக்கெடுப்பு (Survey) எடுக்க வைத்தேன். அப்போது ஆண்கள் பெண்கள் சார்பாக பல விஷயங்கள், கேள்விகள் முன்னால் வந்தன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு நான் யூ.கே, ஜெர்மனி இஜ்திமாக்களிலும் மாநாடுகளிலும்

சொற்பொழிவுகளுக்கான ஆயத்தங்களை செய்தேன். இவ்வாறு சர்வே செய்வதனால் - இருவரின் பிரச்சனைகளை அறிவதனால் பல கேள்விகள் முன்னால் வரும். பிறகு அதன் விளைவாக அடுத்து தர்பிய்யத்திற்கான, சீர்திருத்தத்திற்கான செயல்முறைத் திட்டத்தை உருவாக்கலாம்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** சில ஆண் மக்களின் தாய்மார்கள், **எங்கள் பையன் சம்பாதிக்கிறான். அவனுக்கு நாங்களே வரன் பார்த்துக் கொள்வோம் எனக் கூறுகின்றனர்.** அடுத்து சோம்பேறியாக இருப்பவனை ஜமாஅத்திடம் ஒப்படைத்து விடுகின்றனர். பிறகு சம்பாதிக்கும் பையன் நன்கு சம்பாதிக்கும் வரை காத்திருக்கின்றனர். **பின்னர் அதிக காலதாமதம் ஆகி விடும்போது - வரன் கிடைக்காதபோது அந்தத் தாய்மார்கள் ஜமாஅத்திடம், இவருக்கு வரன் பார்த்துக் கொடுங்கள் எனக் கூறுகின்றனர்.**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** யூ.கே. வின் ஆய்வின்படி, அங்கு 65% திருமண உறவுகள் நிலைபெறுகின்றன. 35% திருமண உறவுகள் முறிந்து விடுகின்றன. இங்கு கனடாவில் 20% (திருமண உறவுகள்) முறிந்து விடுகின்றன. நீங்கள் இந்த எண்ணிக்கையையும் குறைக்க வேண்டியது வரும். **இந்த எண்ணிக்கை அதிகமாக வேண்டாம்.**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** சில நேரத்தில் பையன் வேதத்தைக் கொண்டவர்களைச் சேர்ந்தவன் எனக் கூறுகின்றனர். (அதாவது அஹ்லே கிதாபைச் சேர்ந்தவன்; அஹ்லே கிதாபைச் சேர்ந்த ஆணை திருமணம் செய்வது திருக்குர்ஆனின்படி ஆகுமானதுதானே என்கின்றனர்). இக்காலத்தில் ஷிர்க் செய்யாத வேதத்தைக் கொண்டவர் யார் இருக்கிறார்? ஷிர்க் செய்பவருடன் திருமணம் செய்வதற்கு அனுமதி

இல்லை. எனவே நீங்களே உங்களுக்குப் புரிய வைப்பதில் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது வரும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** எவர்கள் ஜமாஅத்திற்கு வெளியே திருமணம் செய்கிறார்களோ அவர்கள் அஹ்மதியல்லாத மவ்லவி அல்லது காஸீ மூலமாக நிகாஹ் நடத்துகிறார்கள். எனவேதான் அவர்கள் ஜமாஅத்திலிருந்து வெளியேற்றப் படுகிறார்கள்.

எவர் முறைப்படி அனுமதியுடன் அஹ்மதியல்லாத பெண்ணை திருமணம் செய்கின்றாரோ அவருடைய நிகாஹ்வை ஓர் அஹ்மதி நடத்துகின்றாரோ அதற்கு குறிப்பிட்ட நிலைமைகளில் அனுமதி வழங்கப்படுகிறது.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** அஹ்மதியல்லாத சில பெண்கள் தமது பெற்றோர் மறுப்பதன் காரணமாக தமக்கு வலியாக நியமிக்கும்படி விண்ணப்பிக்கின்றனர். அப்போது ஜமாஅத்தும் குறிப்பிட்ட நிலைமைகளின் காரணமாக (வலியை-காப்பாளரை)நியமித்து விடுகிறது. அத்தகைய சூழ்நிலையில் நிகாஹ் பள்ளிவாயிலில் நடக்காது; முபல்லிக் நடத்தவும் மாட்டார். வேறு ஓர் இடத்தில் நடக்கும். அஹ்மதி ஒருவர் நடத்தி விடுவார். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: **அப்படிப்பட்ட திருமணத்தில் ஜமாஅத் பொறுப்பாளர்கள் செல்லக் கூடாது என நான் தடுத்திருக்கிறேன்.**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** Arrange marriage system த்திலும் தர்பிய்யத்தின் குறைபாடு இருக்கிறது. முதல் விஷயம் துஆவாகும் என்பதை அவர்களுக்குப் புரிய வையுங்கள். திருமணத்தில் செல்வம், குடும்பம், குலம் கோத்திரம், மார்க்கம் ஆகியவை

பார்க்கப்படுகின்றன. நீங்கள் மார்க்கத்தைப் பாருங்கள் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உங்கள் பார்வை மார்க்கத்தின் மீது இருக்க வேண்டும். பையனும் மார்க்கப் பற்றுள்ளவனாக இருக்க வேண்டும்; பெண்ணும் மார்க்கப் பற்றுள்ளவளாக இருக்க வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** உறவுகளைப் பார்ப்பதற்கும், தீர்ப்பளிப்பதற்கும் மக்களை நீங்கள் துஆவின் பக்கம் அழைக்க வேண்டியது வரும். துஆ செய்து பிறகு தீர்மானியுங்கள்.

Arrange marriage லும் உங்களுக்கு கலந்தாய்வு (Counselling)செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. வீட்டிற்கு சென்று பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்து விட்டு பிறகு மறுத்துக் கொண்டே செல்வது என்பது இருக்கக் கூடாது. பெண்ணை விற்கக் கூடிய பொருளாகக் கருத முடியாது. உறவுகளை தேர்ந்தெடுப்பதிலும் ஒழுங்குமுறைகள் இருக்கின்றன. அவற்றை கடைபிடிக்க வேண்டும்.

சில நேரத்தில் ஆண் அல்லது பெண்ணை ஆதாரமாகக் கொண்டு ஆய்வு அறிக்கையை முரப்பிகள் அல்லது ஜமாஅத் தலைவர்கள் குடும்பத்தினர்களுக்கு தெரிவித்து விடுகின்றனர். அதன் காரணமாக கோபங்கள் ஏற்படுகின்றன என்ற கேள்வி ஹுஸூர் அவர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டபோது, **ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** முரப்பிகள் அல்லது தலைவர்கள் தாமாகவே யாருக்கும் எதையும் கூற வேண்டாம் என அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள். என்ன அறிக்கையாக (Reportஆக) இருந்தாலும் அது தர்பிய்யத் செயலரிடம் அல்லது அமீரிடம் வரட்டும். பிறகு முரப்பிகள் மற்றும் ஜமாஅத் தலைவர்களுக்கு ஜமாஅத் சகோதரர்களிடம் இருக்கும் உறவில் எவ்வித குறைவும் ஏற்படாதிருப்பதற்காகவும், ஜமாஅத்

தர்பிய்யத் விஷயங்கள் தொடர்வதற்காகவும் என்ன அறிக்கை (Report) வந்தாலும் அதை யாருக்கு சொல்ல வேண்டுமோ அவ்விருவரில் ஒருவர் சொல்லட்டும். எந்த ஒரு குடும்பத்தினராவது ஏதாவது கோபத்தை வெளிப்படுத்த வேண்டுமென்றாலும் மேலிடத்து அளவிலேயே இருக்க வேண்டும். ஜமாஅத்துகளில் அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகக் கூடாது. தர்பிய்யத்தின் வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதற்காக ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் மீது மேலிடம் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும்.

சில நேரத்தில் பெற்றோர்களின் தலையீட்டின் காரணமாக திருமணங்கள் நடைபெறுவதில்லை என ஹுஸூர் அவர்களிடம் கூறியபோது, **ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** எத்தனை பெற்றோர்கள் அப்படி இருக்கின்றனர்? பிறகு அவர்களுக்குப் புரிய வையுங்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அண்மையில் நான் இரண்டு திருமணங்களை யூ. கே. வில் நிறைவேற்றி வைத்தேன். குழந்தைகளுக்கு திருமணம் செய்து வையுங்கள்; அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள் என முதலில் பெற்றோர்களுக்குப் புரிய வையுங்கள். அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், பிடிவாதம் செய்கிறார்கள் என்றால்,'பிறகு அவர்களிடம் இவர்கள் எங்களிடம் வந்தால் அவர்கள் தவறுகளிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக நாங்கள் அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து விடுவோம்' என (பெற்றோர்களாகிய) அவர்களிடம் கூறி விடுங்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: **ஆனால் அப்படிப்பட்ட ஒவ்வொரு பிரச்சனையிலும் அதற்கான அனுமதியை என்னிடமிருந்து பெற வேண்டியது அவசியமாகும்.**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** பெற்றோருக்கும்

கலந்தாய்வு (Counselling) செய்ய வேண்டியது அவசியமாகும். தாய் தந்தையரை தனியாக அழையுங்கள். அவர்களுடனும் கலந்தாய்வு (Counselling)செய்யுங்கள்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** சில தாய்மார்கள் படித்தவர்களாக இருக்கின்றனர். இன்னும் சிலர் படிக்காதவர்களாக இருக்கின்றனர். இருவரின் சிந்தனைகள் வேறுவிதமாக இருக்கின்றன. அவர்களின் சிந்தனைகள், எண்ணங்களுக்கேற்ப அவர்களுக்கு கலந்தாய்வு (கவுன்சிலிங்) நடக்க வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: பெண் திருமணத்திற்குப் பிறகும் கல்வி கற்பார்; மாமனார் வீட்டில் அதற்கான செலவை நிறைவேற்றுங்கள்** என்ற நிபந்தனை சில நேரத்தில் வைக்கப்படுகிறது. திருமணத்திற்குப் பிறகு கல்வி கற்பதென்றால் கணவரின் அனுமதியுடன் நடக்கும். இல்லையென்றால் **(பெண்) தமது வீட்டில் படித்து விட்டு வரட்டும்.**

குத்தாம் மற்றும் லஜ்னாவிலும் ரிஷ்தா வ நாத்தாவை (திருமண உறவுத் துறையை) ஆதாரமாகக் கொண்டு ஒருவரை குறிப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் **ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** அசல் வேலை ஜமாஅத்தின் ரிஷ்தா வ நாத்தா துறைக்குரியதாகும். ஆயினும் குத்தாமில் சத்ருக்கு ஓர் உதவியாளர் லஜ்னாவில் சத்ருக்கு ஓர் உதவியாளர் என்ற வகையில் இவர்கள் இருவரும் தத்தமது அட்டவணையை update வைத்தல் என்ற அளவுக்கு அவர்களிடம் வேலையை ஒப்படைக்கலாம். லஜ்னா கருத்தரங்கம் (Seminar) நடத்த வேண்டுமென்றால், தாய்மார்களை, பெண்மக்களை அழைக்க வேண்டுமென்றால் ரிஷ்தா வ நாத்தா விஷயமாக பேச வேண்டுமென்றால் அவர்களுக்கு இஸ்லாமிய போதனைகள் பற்றி எடுத்துக்

கூற வேண்டுமென்றால் அவர்களுக்கு புரிய வைக்க வேண்டுமென்றால் இந்த வேலை லஜ்னா சத்ர் உதவியாளர் மூலமாக நடைபெறலாம். அவ்வாறே சத்ர் குத்தாம், உதவியாளர் மூலமாக இந்த வேலையை செய்யலாம். ஆனால் இவர்கள் இருவரும் உங்களுக்கு தொடர்ந்து அறிக்கை (Regular Report) கொடுக்க வேண்டிய கட்டாயமில்லை. அவர்களுக்கு தனி அமைப்பு இருக்கிறது.ஆயினும் உங்களிடம் உள்ள **List** (அட்டவணை) **update** ஆக இருப்பதற்காக நீங்கள் சத்ர் லஜ்னா மூலமாகவும், சத்ர் குத்தாம் மூலமாகவும் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் அந்த அட்டவணையைப் பெறலாம்.

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# யூ.கே ரிஷ்தா வ நாத்தா (திருமண உறவுத் துறை)கமிட்டி கூட்டத்தில் ஹுஸூர் அவர்கள் வழங்கிய வழிகாட்டல்கள்

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** கடந்த ஆண்டுகளில் எத்தனை திருமணங்கள் நடைபெற்றன. அவற்றில் எத்தனை தலாக்கில் முடிந்தன; எத்தனை குலாவில் முடிந்தன என்பதைப் பற்றி ரிஷ்தா வ நாத்தா துறை (திருமண உறவை ஏற்படுத்தும் துறை) பார்க்க வேண்டும்; ஆய்வு செய்ய வேண்டும். 270 திருமணங்கள் இங்கு நடைபெற்றிருந்தன. அவற்றில் எத்தனை தலாக் மற்றும் குலாவில் முடிந்துள்ளன?

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ஐரோப்பாவில் திருமணங்கள் முறியும் நோய் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. பிரிவினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. தர்பிய்யத்தின் அதிக வேலை நடைபெற வேண்டியதுள்ளது. தர்பிய்யத் துறை மற்றும் இஸ்லாஹீ கமிட்டிகள் (சீர்திருத்தக் குழுக்கள்) எல்லாம் இணைந்து வேலை செய்ய வேண்டும். இஸ்லாமிய போதனை என்ன? கணவன் மனைவியின் உரிமைகள், கடமைகள் யாவை? ஆகியவற்றை எடுத்துக் கூறுங்கள். உறவுகளை ஏன் ஏற்படுத்த வேண்டும்? திருமணத்தின் குறிக்கோள்கள், நோக்கங்கள் என்ன என்ற உணர்வுகளை உருவாக்க வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** உங்களுடைய ரிஷ்தா வ நாத்தா மற்றும் கமிட்டியின் கூட்டம் அமீர் சாஹிப் அவர்களுடன் மாதாமாதம் முறைப்படி நடக்க வேண்டும். அதில் எல்லா விஷயங்கள் பற்றியும் பரிசீலிக்கப்பட வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ஒவ்வொரு இரண்டாவது, மூன்றாவது மாதம் குத்தாம், லஜ்னா, அன்ஸார் மற்றும் ஜமாஅத் அளவில் பெற்றோர், ஆண்கள், பெண்கள் ஆகியோரின் கருத்தரங்கு (Seminar)நடக்க வேண்டும். லஜ்னா தனிப்பட்ட முறையில் கருத்தரங்கு (Seminar) நடத்தலாம்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** சில நேரத்தில் திருமண உறவு முறிவதற்குக் காரணம் பெண்கள் தவறான நம்பிக்கையையும், பழக்கங்களையும் கொண்டு வருகின்றனர். மாப்பிள்ளையின் பொருளாதார நிலைமை படிப்படியாக நல்லதாக மாறுகிறது. வேலை கிடைக்கிறது. பிறகு படிப்படியாக வருவாய் அதிகமாகிறது. இவற்றிக்கு காலம் தேவைப்படுகிறது. ஆனால் மனைவி முதல் நாளிலேயே தவறான நம்பிக்கையையும், பழக்கங்களையும் கொண்டு வருகிறாள். இங்கு அவளுக்கு தர்பிய்யத் கொடுக்கும் கடமை பெற்றோருக்கும் இருக்கிறது.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** பெண்களின் ஈடுபாடுகள் (Activities) ஆகியவற்றைப் பற்றி தெரிந்து விடுகிறது. பையன்களின் Activities பற்றியும் அவர்களின் ஈடுபாடுகள் என்ன என்பதைப் பற்றியும் ஆய்வு செய்து வர வேண்டும். இது தர்பிய்யத்தின் விவகாரங்களாகும். இவை பிறகு ரிஷ்தா வ நாத்தாவின் (திருமண உறவுத் துறையின்) பிரச்சனைகளாகின்றன.

இணையதளம் பற்றிக் கூறும்போது ஹுஸூர் அவர்கள், (பெண்ணின்)படத்தை வெளியிட வேண்டாம் எனக் கூறினார்கள்.என்ன Security (பாதுகாப்பு) இருக்கும் எனக் கேட்டார்கள். சிலர் இப்படியும் இருக்கிறார்கள். அதாவது யாருக்கு வரன் பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறதோ அவருக்கு எதிராக தவறான விஷயங்களை மற்றவர்கள் வரை அல்லது எங்கு வரன் பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறதோ அந்த

குடும்பம் வரை எட்ட வைத்து விடுகிறார்கள். அவர்களின் வரன் முறிந்து விடும்போது பிறகு அவருக்கு வேறு எந்த இடத்திலும் வரன் கிடைக்காதிருப்பதற்காக அந்தப் பெண்ணின் மீது குற்றம் சுமத்துகின்றனர். **இது பற்றி எனக்குத் தெரிய வரும்போது அப்படிப்பட்டவர்களை நான் ஜமாஅத் அமைப்பிலிருந்து நீக்கி விடுகிறேன்.**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ஓர் ஆண் எவர் மீதாவது தவறான குற்றம் சுமத்தி மற்றவர்களை தவறான எண்ணம் கொள்ள வைத்தார் என்றால், அது பற்றிய அறிக்கை எனக்கு வர வேண்டும். சீர்திருத்தக் குழு தாராளமாக தனது வேலையைச் செய்யட்டும். ஆனால் எனக்கு அதற்கான அறிக்கை வர வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ரிஷ்தா வ நாத்தா (திருமண உறவுத் துறை) தொடர்பாக உங்களுக்கு எங்கிருந்து எந்த ஆலோசனை வந்தாலும் அது பற்றி சிந்தியுங்கள். கிழக்கு இலண்டனிலிருந்து ஓர் அறிக்கை வந்திருந்தது. உங்களுக்கு அனுப்பியிருந்தேன்.

**ஹுஸூர் அவர்களிடம்** கருத்தரங்கு(Seminar) நடக்க வேண்டும் என்ற ஆலோசனை வைக்கப்பட்டது. அப்போது ஹுஸூர் அவர்கள், இப்போது, **'நடக்க வேண்டும் என்ற விஷயத்தை விட்டு விட்டு நடந்து விட்டது' என்ற விஷயத்தின் பக்கம் வாருங்கள்** என்றார்கள். அப்போது இதுவரை 8 கருத்தரங்குகள் (Seminars) நடத்தப்பட்டிருப்பதாக அறிக்கை தெரிவிக்கப்பட்டது.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** கிழக்கு இலண்டன் ஜமாஅத்தில் அதிக பிரச்சனைகள் இருக்கின்றன. இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். ப்ராடு ஃபோர்டு (Bradford) மற்றும் ஹெட்ல்ஸ் ஃபீல்டு (Hdlz Field) ஆகிய இடங்களிலும் பிரச்சனைகள்

உருவாகிக் கொண்டிருக்கின்றன. கிழக்கு இலண்டனில் பயன்பெற்றவாறு ஜமாஅத் அமைப்புக்கு எதிராக தவறான எண்ணம் கொள்வதற்கு முயற்சி செய்கின்றனர்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** உங்களுடைய ஊழியர்கள் நன்றாக எளிமையான பேச்சின் மூலமாக மக்களுடன் நடந்து கொள்ள வேண்டும். மக்கள் என்ன வேண்டுமானாலும் கூறிக் கொண்டிருக்கட்டும். ஆனால் அவர்கள் உங்களுடைய ரிஷ்த வ நாத்தா (திருமண உறவுத் துறை) அலுவலகம்/வஸிய்யத் அலுவலகம் ஆகியவற்றின் பதிலைக் கேட்கும்போது தவறான எண்ணம் கொண்டு விடுகின்றனர்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் காலத்திலிருந்து இதுவரை ரிஷ்தா வ நாத்தா (திருமண உறவுத் துறை) தொடர்பாக தொகுக்கப்பட்ட வழிகாட்டல்களை ரப்வாவிலிருந்து வரவழையுங்கள். அது பற்றி மறுபரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** அட்டவணையை உருவாக்க வேண்டும். பாகிஸ்தானில் மொகல், சய்யிது ஆகிய சகோதரத்துவ அமைப்பு இருக்கிறது. ஆனால் இங்கு வெளிநாட்டில் பல்வேறு சமுதாயங்கள் இருக்கின்றன. திருமணத் தொடர்புகளும் பல்வேறு சமுதாயங்களுக்கிடையில் இருக்கின்றன. ஆப்பிரிக்காவிலும், அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் பல்வேறு சமுதாயங்களுக்கிடையில் திருமண உறவுகள் நடக்கின்றன. இவற்றையெல்லாம் பார்க்க வேண்டியது வரும்.

ஹுஸூர் அவர்கள் ரிஷ்தா வ நாத்தா தொடர்பான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

அவர்களின் மேற்கோளைக் குறிப்பிட்டார்கள். அது ரப்வாவிலிருந்து வெளிவரும் அல்ஃபஸ்ல் பத்திரிகை 24 டிசம்பர் 2010 -ல் வெளியாகியுள்ளது.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** இதன் முக்கியத்துவம் 100 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தது போன்றே இன்றும் இருக்கிறது. நீங்கள் ஒரு பதிவேட்டை வையுங்கள்; (அதில்) பதிவு செய்யுங்கள்.

பாகிஸ்தானிலுள்ள கில்கிட் (Gilgit) நகரத்தை ஆதாரமாக கொண்டு **ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** அங்கு ஆகாகானிகள் என்ற பிரிவினரைச் சேர்ந்த **பெண்கள் எட்டாவது, ஒன்பதாவது வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆண்களை திருமணம் செய்து கொண்டனர். இனி வரும் சந்ததிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் படிக்க வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்தனர்.**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** பல்வேறு சம்பவங்கள் முன்னால் வருகின்றன. உதாரணமாக, மாப்பிள்ளை கனடா செல்ல வேண்டியதிருக்கிறது; அவர் அங்கே தங்கியிருக்கிறார். இப்போது பெண்ணோ, கனடா செல்ல வேண்டாம் எனக் கூறுகிறாள். இங்கே பெண்கள்தான் (திருமணத்திற்குப் பிறகு) மாப்பிள்ளை வீட்டிற்கு செல்கிறாள். மாப்பிள்ளை அல்ல என்பதை புரிய வைக்க வேண்டும் என ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** இரு வீட்டடாருக்கும் குறிப்பாக பெண் வீட்டாருக்குப் புரிய வைக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், உங்களிடமிருந்து விரிவான விபரம் கேட்கப்படுகிறதென்றால் அதற்குக் காரணம், மாப்பிள்ளை வீட்டார் வரன் விஷயமாக பெண் வீட்டிற்கு செல்லும்போது அவர்களுக்கு முதலிலேயே எல்லா விஷயங்களும், நிலைமைகளும்

தெரிவதில்லை; மேலும் தகவலைப் பெறாமல் வீட்டிற்கு வந்து பார்த்துவிட்டு சாப்பிட்டு விட்டு திரும்பிச் சென்று, வேண்டாம் என்று சொல்லும் நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான். எல்லா விஷயங்களும் முன்னரே தெரிய வந்தால் பிறகு அப்படிப்பட்ட நிகழ்வுகள் குறைவாக நடக்கும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** பெண்ணைப் பற்றிய பொதுவான தகவல்களை முடிந்தவரை பெறுங்கள். ஆனால் இவையனைத்தும் இரகசியமாக வைக்க வேண்டும்.

பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்து விட்டு வேண்டாம் என்று கூறிவிடுகிறார்கள் என யூ. கே. அமீர் சாஹிப் கூறியபோது **ஹுஸூர் அவர்கள்,** புகைப்படத்தை பின்னர் காட்டுங்கள்; முதலில் விபரத்தைக் காட்டுங்கள் என்று **கூறினார்கள்.**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** பெற்றோரின் தர்பிய்யத்தும் அவசியமாகும். வீட்டின் சூழ்நிலை நன்றாக இருக்கும்; பெற்றோர் மகிழ்ச்சியடைவார்கள். பிறகு பிள்ளைகளுக்கும் நல்ல தர்பிய்யத் கிடைக்கும். வரக் கூடிய மணமகளுக்கும் வீட்டில் நல்ல சூழ்நிலை உருவாகும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** உங்களின் (ரிஷ்த வ நாத்தா) துறை வரன் ஏற்படுவதற்கு முன்னர் மட்டுமல்ல; மாறாக, **வரன் ஏற்பட்டு விட்ட பிறகும் கூட கண்காணித்து வர வேண்டும்.**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ரிஷ்தா வ நாத்தா தொடர்பாக குத்தாம், லஜ்னா தத்தமது வேலைகளை செய்கிறார்கள் என்றால் அவர்கள் செய்யட்டும். ஆனால் நீங்கள் உங்கள் வேலையைச் செய்ய வேண்டும். பல்வேறு ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கும். பல்வேறு

இடங்களிலிருந்து தகவல்கள் கிடைத்துக் கொண்டிருந்தால் பிறகு அதிகமாக ஆய்வுகள் நடைபெறும். வேலை சிறப்பாக நடைபெறும்.

Web site (இணைய தளம்) தொடர்பாக **ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** சரி. முழுமையான எச்சரிக்கையுடன் ஆரம்பியுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்கள் பற்றி **ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** சரி. அதை மொழியாக்கம் செய்து கொடுங்கள். Web site (வெப் சைட்)லும் கொடுங்கள்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** எவர்கள் வரன் தேடுவதில் - வரனை முடிவு செய்வதில் தன் சார்பாக முயற்சி செய்கிறார்களோ அவர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கட்டும். ஆனால் அவர்களுடைய முயற்சி வெற்றியடைந்து விட்டால் - வரன் கிடைத்து விட்டால் பிறகு அவர்கள் உங்களுடைய அட்டவணையிலிருந்து (Listலிருந்து) வெளியேறுவதற்காக அது பற்றி உங்களுக்குத் தெரிய வேண்டும். சீக்கிரம் உடனுக்குடன் உங்களுக்கு தகவல் வந்து கொண்டிருக்க வேண்டும். **வரன் முடிப்பது மற்றும் திருமணம் செய்வது ஆகியவற்றுக்கிடையில் நான்கு ஆறு மாதங்கள் வித்தியாசங்கள் இருக்கின்றன.** வரன் முடிந்திருக்கிறது. இன்னொருவர் வரனை எடுத்துக் கொண்டு சென்று விட்டார். அவருக்குப் பிடித்து விட்டது. எனவே முதலில் பேசி முடித்த வரன் முடிந்து விட்டது என்றால் பிறகு இது பிரச்சனையை உருவாக்கும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** U.K (யூ.கே) விற்கு வெளியே வரன் பார்க்கக் கூடாது என்று கூறுகின்ற பெண்கள் தவறாகக் கூறுகின்றனர். **அவர்கள் மற்றவர்களைக் கெடுக்கின்றனர்.**

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** நீங்கள் உங்கள் அறிக்கையை முறைப்படி எனக்கு அனுப்பி வையுங்கள். உங்களின் விஷயங்கள் எனக்குத் தெரிவதில்லை.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ஜமாஅத்தின் தர்பிய்யத் துறை முழுமையான முறையில் வேலை செய்வதில்லை. சில வீடுகளில் பெண்கள் பெரியவர்களாகி விடுகின்றனர்; வயது அதிகமாகி விடுகின்றது. தாய் தந்தையர் கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றனர். பெண்கள் தனது விருப்பத்திற்கேற்ப வரனைத் தேடிக்கொள்கின்றனர்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** இந்த ரிஷ்தா வ நாத்தா ( திருமண உறவுத் துறை) என்பது மிகவும் முக்கியமான துறையாகும். உங்கள் பார்வை இதன் மீது இருக்க வேண்டும். முறைப்படி இதன் அறிக்கை வர வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** பெண்களுக்கு அவர்கள் பகிரங்கமாகப் பேசுவதற்காக தனியாக கருத்தரங்கு நடத்தப்பட வேண்டும்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** ஆண்களுக்கு அவர்கள் தெளிவாக விஷயத்தை எடுத்துக் கூறுவதற்காக தனி கருத்தரங்கு நடத்தப்பட வேண்டும். தற்காலிகமான பயனுக்காகவும், விருப்பங்களுக்காகவும் உங்களுடைய வருங்கால சந்ததிகளை ஜமாஅத்தை விட்டும் தூர விலக்கி விடக் கூடாது என்பதைப் புரிய வைக்க வேண்டும். உங்களுடைய உறவுகளையும் நிலைநாட்டுங்கள். உங்கள் வருங்கால சந்ததிகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக தியாகங்களை செய்யுங்கள். மேலும் உங்களிடம் தைரியத்தையும், சகிப்புத் தன்மையையும் உருவாக்குங்கள்.

**ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:** நாம் ஏன் அஹ்மதிகளாக இருக்கிறோம்? அதன் முக்கியத்துவம் என்ன? எவ்வாறு நாம் நமது தனித்தன்மையை நிலைநாட்ட வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். நாம் ஏன் அஹ்மதியாக இருக்கிறோம்? நாம் ஏன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதெல்லாம் சின்னச் சின்ன விஷயங்களாகும். அவை அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும்.